# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 கார்த்திகை 10 வெள்ளிக்கிழமை (25.11.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 364


## சிங்களத் தலைமையை தெரிவு செய்வதில் உரிய பாடம் புகட்டி விட்டனர் தமிழ் மக்கள்

### புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மான் பெருமிதம்



ஆனையிறவு,நவ.25

தமிழர்கள் தமது தலைமையை தெரிவு செய்துவிட்டனர். சிங்கள தேசம் தனது தலைமையை தானே பார்த்துக்கொள்ளட்டும் என்ற தெளிவான செய்தியை தமிழ் மக்கள் தெரிவித்திருக்கின்றார்கள்.

சிறிலங்கா தேசியத்தின் தலைமையை தெரிவுசெய்வதை புறங் கையால் புறந் தள்ளியதன் மூலம் தமிழ் மக்கள் சிங்கள தேசத்துக்கு பாடம் புகட்டியிருக்கிறார்கள்.

இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் மூத்த தளபதியும் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளருமான பொட்டு அம்மான்.

ஆனையிறவில் நேற்றுமாலை நடைபெற்ற மாவீரர் நாள் சிறப்பு நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாவீரர்களின் அர்ப்பணங்கள் எமது தேசத்தின் விடுதலைக்காக (16 ஆம் பக்கம் பார்க்க)

## மூத்த தளபதிகட், பொறுப்பாளர்கள், போராளிகள் ஆனையிறவில் ஒன்றுகூடி மாவீரர்களுக்கு அஞ்சலி

ஆனையிறவிலிருந்து அற்புதன், பிரபா

ஆனையிறவு,நவ.25

தமிழீழ விடுதலைப் போராட்டத் தில் தமது இன்னுயிர்களை ஈகம் செய்த மாவீரர்களை நினைவு கூரும் சிறப்பு நிகழ்வு நேற்று ஆனையிறவில் இடம் பெற்றது.

இயக்கச்சி சந்திக்கு சமீபமாக- தமி ழீழ விடுதலைப் புலிகளால் வெற்றி கொள்ளப்பட்ட ஆனையிறவு பிரதான படைத்தளம் அமைந்திருந்த பகுதியில் சிறப்பாக அமைக் கப்பட்ட அரங்கில் மிகவும் உணர்வு பூர்வமாக எழுச்சியு டன் இந்த நிகழ்வு நடைபெற்றது.



மேலும் படங்கள் 2 ஆம் பக்கத்தில்

விடுதலைப் புலிகளின் சிறப்புத் தளபதிகள், தளபதிகள், துறைசார் பொறுப்பாளர்கள், போராளிகள் பல நூற்றுக்கணக்கில் அங்கு ஒன்று கூடி இதுவரைகால (16 ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுக்கு வர புலிகளுக்கு அழைப்பு

# அதற்கு முன்னர் சர்வ கட்சி மாநாடு

## அரசுத் தரப்பில் அறிவிப்பு

கொழும்பு, நவம்பர்.25

“இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமாதான முன்னெடுப்புகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. பேச்சுகளில் கலந்துகொள்ளுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஜனாதிபதி பகிரங்க அழைப்பு விடுத்திருக்கின்றார். புலிகளுடன் பேச்சுகளை ஆரம்பிக்க முன்னர் சர்வ கட்சி மாநாடு ஒன்றைக் கூட்டி அரசியல் கட்சிகளின் ஆலோசனைகளையும் அபிப்பிராயங்களையும் பெற அரசு உத்தேசித் துள்ளது.”

- இவ்வாறு இலங்கையின் புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசுத் தரப்பிலிருந்து அறிவிக்கப்பட்டிருக்கின் றது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறையில் கிரனேட் வீச்சு ஐந்து இராணுவத்தினர் படுகாயம்

### •படையினர் திருப்பிச் சுட்டதில் இளைஞர் காயம்

குடத்தனை,நவ.25

இராணுவ ட்ரக் மீது இலக்குவைத்து இனந் தெரியாதோர் மேற்கொண்ட கைக்குண்டுத் தாக்குதலில் இராணுவத்தினர் ஐவர் காயம டைந்ததுடன், பொதுமகன் ஒருவரும் படு காயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று இரவு 7.45 மணி யளவில் பருத்தித்துறை சாரையடி, மருதடிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இராணுவத்தினர் பயணம் செய்துகொண் டிருந்த ட்ரக் மீது இனந்தெரியாதோர் கைக் குண்டுத் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்றும் -

இதில் இராணுவத்தினர் ஐவர் படுகாய மடைந்தனர் என்றும் -

இதனையடுத்து, இராணுவத்தினர் நடத் திய பதில் தாக்குதலில் வீதியால் சென்றுகொண் டிருந்த கரவெட்டி அத்தாயைச் சேர்ந்த தங்க வேலாயுதம் தபேந்திரன் (வயது 20) என்ற

(16 ஆம் பக்கம் பார்க்க)

★ வடக்கு - கிழக்கு இணைப்பை நீக்கவேண்டும். ★ நோர்வேயைப் புறக்கணிக்கவேண்டும்.
★ பொதுக்கட்டமைப்பை ஒழிக்கவேண்டும். ★ இடைக்கால நிர்வாகம் என்ற பேச்சே கூடாது
★ யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை ட ற்றவேண்டும்.

# பேச்சுக்கான நிபந்தனையை ஞாபகப்படுத்துகிறது ஜே.வி.பி.!

கொழும்பு, நவ.25

இடைக்கால நிர்வாக சபையை அடிப்படையாகக்கொண்டு எந்த அமைதிப்பேச்சும் இடம் பெறமாட்டாது. 'மஹிந்தவின் சிந்தனைகள்' என்ற தேர்தல் விஞ்ஞாபனத்தை அடிப்படையா கக்கொண்டே சமாதானப் பேச்சுகள் நடைபெறவேண்டும். அதற்கு அப்பால் எந்தவொரு தீர்வுத்திட்டத்தையும் நாம் அனுமதிக்கப் போவதில்லை.

- இவ்வாறு நேற்றுத் திட்டவட்டமாகக் கூறிவிட்டது ஜே.வி.பி.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இலங்கை மன்றக் கல்லூரியில் ஜே.வி. பி.நேற்று செய்தியாளர் மாநாடொன்றை நடத்தியது. ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, செயலாளர் ரில்வின் சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர்களான நந்தன குணதி லக்க, விஜித ஹேரத் ஆகியோர் இந்தச் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

இடைக்கால நிர்வாக சபையை அடிப்படையாக வைத்து அமைதிப்பேச்சுகளை நடத்து வதற்கு விடுதலைப் புலிகள் அமைப்புத் தயாராக இருப்பது பற்றித் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்திருக்கும் கருத்துகள் தொடர்பில் செய்தி யாளரொருவர் அங்கு கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்தபோதே மேற்கண்டவாறு கட்சியின் நிலைப்பாட்டை விளக்கினார் ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா. அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

(16 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றில் இன்று ஜனாதிபதி உரை

கொழும்பு,நவ.25

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புதிய அர சின் கொள்கை விளக்க உரையை இன்று நாடாளுமன்றத்தில் நிகழ்த்துவார்.

இன்று காலை 10 மணிக்கு நாடாளு மன்றத்திற்கு வருகை தரும் ஜனாதிபதிக்கு நாடாளுமன்றத்தில் செங்கம்பள வரவேற் பளிக்கப்படும்.

10.30 மணிக்கு நாடாளுமன்றக் கூட்டத்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் நேற்றிரவும் குண்டுவீச்சுத் தாக்குதல்!

### 2 சிப்பாய்கள், 4 பொதுமக்கள் காயம்

கொழும்பு,நவ.25

திருகோணமலை அநுராதபுரம் சந்தியில் கடமையில் இருந்த இராணுவத்தினர் மீது இனம் தெரியாதோர் வீசிய கைக்குண்டுத் தாக்குதலில் இரு இராணுவச் சிப்பாய் களும், நான்கு பொதுமக்களும் காயமுற் றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கைக் குண்டுத் தாக்குதல் நேற்று இரவு 7.40 மணியளவில் இடம்பெற்றுள் ளது.

காயமுற்றோர் திருமலை வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட னர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றுமுன்தினம் திருமலை லிங்கநகர் பகுதியில் இடம்பெற்ற கிரனேட் வீச்சுச் சம் பவத்தில் நான்கு இராணுவத்தினர் காய மடைந்தனர் என்பது தெரிந்ததே. (எ-க-13)

## எந்த நேரத்திலும் ஜே.வி.பி. அமைச்சரவையில் சேரும்

ஜே.வி.பியினர் எந்தச் சமயத்திலும் அமைச்சுப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள லாம். இது தொடர்பாக அக்கட்சியின் அரசி யல் குழு பரிசீலனை செய்துவருகின்றது எனக் கூறுகின்றார் ஊடகத்துறைகள் அமைச் சர் அநுர பிரியதர்ஷன யாப்பா.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டி லேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

''ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்கு ஜே.வி.பி. முக்கிய பங்கினை அளித்துள்ளது. ஆனால், அவர்கள் எந்த ஓர் அமைச்சுப் பொறுப்புகளையும் ஏற்க மறுத்து விட்டனர். இது ஏன்?'' - என செய்தியாளர் கள் அமைச்சரிடம் கேட்டனர். "இப்பொழுது ஜே.வி.பியினர் அமைச்சுப் பொறுப்புகளை ஏற்காவிட்டாலும் எமது அரசுக்கு தொடர்ந் தும் ஆதரவை வழங்கு வார்கள் என உறுதி யளித்துள்ளனர். அதேவேளை, அமைச்சுப் பொறுப்புகளை ஏற்பது தொடர்பாக ஜே.வி. பியின் அரசியல் குழு மிகவும் கரிசனையு டன்பரிசீலனை செய்து வருகின்றது. எந்தச் சந்தர்ப்பத்திலும் அவர்கள் அமைச்சுப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள இடமுண்டு."

- என அமைச்சர் பதில் அளித்தார். (எ-க)


## வன்னியில் வானிலை நிலையம்

கிளிநொச்சி,நவ.25

கிளிநொச்சி பாரதிபுரத்தில் அமைக்கப் பட்டுள்ள தமிழீழக் காலநிலை அவதானிப்பு நிலையம் நாளை முதல் இயங்கவுள்ளது.

இதன் திறப்பு விழா நாளை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (எ-க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



யாழ். முலவைச் சந்திக்கு அண்மையில்...




யாழ். இந்துக் கல்லூரி முன்பாக...




யாழ். நகரின் மத்தியில்...



நெல்லியடி கூட்டுறவுச் சங்கம் முன்பாக...

# தமிழீழ மாவீரர் தின எழுச்சிவாரம் உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்,நவ.25

நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ள மாவீரர் தினத்தை முன்னிட்டு குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளதுடன், அலங்கார வளைவுகளும் நிறுவப்பட்டுவருகின்றன.

வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி மற்றும் தீவுப்பகுதிகள் உள்ளிட்ட அனைத்துப் பிரதேசங்களிலும் மாவீரர் தினத்தை எழுச்சியுடன் அனுஷ்டிக்சந் துரிதகதியில் ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன என்றும் -

பொதுமக்கள் உணர்வு பூர்வமாக இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றனர் என்றும் -

'உதயனின்' பிரதேசச் செயதியாளர்கள் அறிவித்துள்ளனர்.

முக்கிய சந்திகள் மட்டுமன்றி பொது நிறுவனங்கள் மற்றும் வீடுகளின் முன்பாகவும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளதுடன், பல இடங்களில் மாவீரர் நினைவாலயங்களும் நிறுவப்பட்டுள்ளன என்றும் - தெரிவிக்கப்பட்டது.

**வடமராட்சியில்**

வடமராட்சியில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்கள், பொது நிறுவனங்கள் மற்றும் முக்கிய சந்திகள், பிரதான வீதிகள் அனைத்திலும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளன. பிரதான வீதிகளுக்கு மேலாக மாவீரர் தினப்பதாதைகளும் கட்டப்பட்டுள்ளன.

நெல்லியடி - கட்டைவேலி ப.நோ.கூ. சங்கம் தனது கட்டுப்பாட்டு எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்களை சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரித்தும் நெல்லியடிச் சந்தியில் உள்ள தலைமை அலுவலகம் முன்பாகவும் பாரிய மாவீரர் வளைவுகளையும் அமைத்துள்ளது.

இதற்கிடையில் - மாவீரர் துயிலும் இல்லத்துக்குச் செல்லும் பிரதான வீதியான நவிண்டில் தாமோதரம் வித்தியாலயச் சந்தியிலும் பருத்தித்துறை கிராமக்கோட்டடிப் பிரதான வீதியிலும் மாவீரர் நினைவு வளைவுகள் கட்டப்பட்டுள்ளன.

வடமராட்சி வடக்குக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கமும் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாசமும் தமது பிரதேசத்துக்கு உட்பட்ட பகுதியில் மாவீரர் தின நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் மில்லர் நினைவரங்கில் மாவீரர் நினைவுப் பந்தல் அமைக்கப்பட்டு மாவீரர் உருவப் படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

வல்வெட்டித்துறை ஆதிகோயிலடி ஆலடி பிரதான வீதி அலங்கரிக்கப்பட்டு விழாக் கோலம் பூண்டுள்ளது.

**தென்மராட்சியில்**

மாவீரர் தினத்தை முன்னிட்டு பலாலி ஆசிரிய கலாசாலையின் உடற்கல்வி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் நீர்வளம் ஆகிய துறைகளைச் சேர்ந்த ஆசிரிய மாணவர்களும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி டிறிபேர்க் கல்லூரி மாணவர்களும், சாவகச்சேரி ப.நோ. கூ.சங்கப் பணியாளர்களும் நேற்று கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

இதேவேளை, மாவீரர் தினத்தை எழுச்சியுடன் அனுஷ்டிக்கும் வகையில், கொடிகாமம் துயிலும் இல்லப் பகுதி எழுச்சிக் கோலம் பூண்டுள்ளது. துயிலும் இல்லம் சிவப்பு, மஞ்சள் கொடிகளாலும் நிழற்குடைகளாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

கொடிகாமம் சந்தியிலிருந்து மாவீரர் துயிலும் இல்லம் வரையான பகுதி சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. அத்துடன், முக்கிய சந்திகளில் மாவீரர் நினைவுப் பந்தல்கள் அமைக்கப்பட்டு, மாவீரர்களின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டுள்ளதுடன், மாவீரர் வளைவுகளும் கட்டப்பட்டுள்ளன.

சாவகச்சேரி ப.நோ.கூ.சங்க எல்லைக்குட்பட்ட மாவீரர்களின் பெற்றோர்கள் இன்று காலை 8.30 மணிக்குக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கத் தலைமை அலுவலகத்தில் சங்கத் தலைவர் கு.ந.பாலச்சந்திரன் தலைமையில் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெறும்.

இந்நிகழ்வில் 50 மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

**வலிகாமத்தில்**

மானிப்பாய்ப் பகுதியில் மாவீரர் தினத்தை முன்னிட்டு வீதிகளிலும் சந்திகளிலும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டுள்ளன.

பலத்த மழையின் மத்தியிலும் பொது நிறுவனங்களாலும் வர்த்தக சங்கத்தினராலும் இந்தக் கொடிகள் கட்டப்பட்டதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இதேவேளை, அலங்கார வளைவுகளை அமைப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

குருநகர் பகுதியில் மாவீரர் தினத்தை எழுச்சியாகக் கொண்டாடும் நடவடிக்கைகளில் குருநகர்ப் பகுதியிலுள்ள இளைஞர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் ஈடுபட்டுவருகின்றனர்.

குருநகரில் உள்ள பல வீதிகளிலும் மாவீரர் வார எழுச்சிப் பதாகைகள் கட்டப்பட்டுள்ளன.

குருநகர் ஆறாம் குறுக்கு வீதியில் குருநகர் கடற்கரை வீதிக்குச் சமீபமாக மாவீரர் வளைவு அமைக்கப்பட்டுள்ளது. மேலும், யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பணிமனையிலும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளன.

**தீவகத்தில்**

தீவுப்பகுதியில் ஊர்காவற்றுறை உள்ளிட்ட சகல இடங்களிலும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளதுடன், அலங்கார வளைவுகளும் கட்டப்பட்டுள்ளன.

இதற்கிடையில் - தீவுப்பகுதியில் மாவீரர் எழுச்சிக் கொடியினை பறக்கவிட்டுச் சென்ற மினிபஸ்கள் நேற்று கடற்படையினரால் மறிக்கப்பட்டுச் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் 10 மணியளவில் குறிகாட்டுவான் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

புங்குடுதீவிலிருந்து குறிகாட்டுவானுக்கு மாவீரர் எழுச்சிக்கொடிகளைப் பறக்கவிட்டவாறு பயணிகளை ஏற்றிச்சென்ற மினிபஸ்களே இவ்வாறு சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

மினிபஸ்களைச் சோதனையிட்ட கடற்படையினர் அவற்றில் கட்டப்பட்டிருந்த கொடிகளை அறுத்தெறிந்தனர் என்றும் செய்தி ஒன்று தெரிவித்தது.

சோதனைக்குட்படுத்தப்பட்ட மினிபஸ் சாரதிகளின் அடையாள அட்டை இலக்கம், வாகன இலக்கம் என்பவற்றையும் கடற்படையினர் பதிவுசெய்தனர் என்று புங்குடு தீவு தனியார் சிற்றூர்த்திச் சங்கத்தினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(எ-13-14-16-51-70-117-135-173-410-ரி)

## அடை மழை பாதித்த சுழிபுரம் நலன்புரி முகாமை மனித உரிமை அலுவலர்கள் பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம்,நவ.25

அடைமழை காரணமாக பாதிக்கப்பட்ட சுழிபுரம் கம்பனை நலன்புரி நிலையத்தில் வசிக்கும் மக்கள் மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ். அலுவலகப் பிரதிநிதிகள் நேற்று மாலை சந்தித்து அவர்களின் குறைகளைத் கேட்டறிந்தனர்.

மனித உரிமை ஆணைக்குழுவின் இணைப் பதிகாரி றோஹித பிரியதர்சன தலைமையில் சென்ற குழுவினரே பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்துள்ளனர்.

இந்தச் சந்திப்புக் குறித்துக் கருத்துத் தெரிவித்த இணைப்பதிகாரி றோஹித பிரியதர்சன - வெள்ளம் காரணமாகப் பாதிக்கப்பட்ட இந்த நலன்புரி நிலையத்தில் உள்ள மக்கள் அன்றாட உணவைக்கூட சமைத்து உண்ண முடியாத நிலையில் உள்ளனர்.

இந்த மக்களுக்கு உதவி வழங்க இதுவரை எந்த அரச, அரசசார்பற்ற நிறுவனங்களும் முன்வரவில்லை. இதுவிடயத்தில் சம்பந்தப்பட்ட அமைப்புகளுக்கு நாங்கள் அழுத்தம் கொடுக்கவுள்ளோம்.

இது விடயமான அறிக்கை எமது தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது - என்றார்.

(எ-14-12)

## ஆனையிறவு மாதிரி நினைவாலயத் திறப்புவிழாக் காட்சிகள்...



படங்கள்: அற்புதன், பிரபா, கந்தசாமி.

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## வழி பிறக்கும் என எதிர்பார்ப்போம்

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்தில் தென்னிலங்கை அரசியல் மீண்டும் 'பழைய குருடி கதவைத் திறவடி' என்ற நிலைக்குப் போகப்போவது தெரிகின்றது.

தென்னிலங்கைத் தரப்புக்கு புதிய தலைமை வந்துவிட்டதால் மீண்டும் 'சக்கடத்தார் பழைய வண்டியில் ஏறி புதிய உலாவை ஆரம்பிக்கப் போகிறார்' என எதிர்பார்க்கலாம்.

முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, ஆர். பிரேமதாஸா, சந்திரிகா குமாரதுங்க ஆகியோரைப் போல இப்போதைய இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் வட்டமேசை மாநாடு, சர்வகட்சிக் கூட்டம், பலதரப்பு கலந்துரையாடல் என்ற ஆரவாரங்களை ஆரம்பிக்கப் போகிறார் எனத் தெரிகிறது. முன்னைய தலைவர்கள் ஏறித் தடுக்கி விழுந்த அதே நொண்டிக் குதிரையில் இவரும் ஏறி விழப்போகின்றார்.

அவர்கள் - முன்னையவர்கள் - எல்லோரும் கால வரையறை குறிப்பிடாமல் வட்ட மேசை, சர்வகட்சி மாநாடுகளை நடத்தி முடித்துவிட்டு அரியணையை விட்டு இறங்கிப் போய்விட்டார்கள். இப்போது வந்திருப்பவர் வேண்டுமானால் சில சமயங்களில் சர்வகட்சி மாநாட்டுக்குக் காலவரையறை குறிப்பிடக்கூடும். அதற்குள் இனப்பிரச்சினை விவகாரம் தொடர்பாக ஓர் இணக்க நிலையை அவர் தெற்கில் ஏற்படுத்துவார் என்பது அசாத்தியமானது. அதற்கு வாய்ப்பே இல்லை என்பதுதான் தமிழரது அனுபவப்பாடம்.

மூன்று தசாப்தகாலம் முடிவின்றித் தொடர்ந்த இனப் போருக்கு தற்காலிக ஓய்வுகொடுத்து நான்கு ஆண்டுகளாகின்றன. யுத்தம் நிறுத்தப்பட்டதால் நெருக்கடி நிலை தணிந்தது என்பது உண்மைதான்.

ஆனால், போரழிவினாலும், பேரழிவுகளினாலும் அல்லற்படும் தமிழர்களின் வாழ்வில் இடைக்கால நிம்மதி தன்னும் ஏற்பட்டதா? தமிழர் தாயகத்தில் இயல்புநிலை தோற்றுவிக்கப்பட்டதா? இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்த முடிந்ததா? போரினால் பேரழிவுக்கு உள்ளான தமிழர் தாயகத்தில் கட்டுமானங்களை மீள அமைக்க முடிந்ததா? அன்றாட ஜீவனோபாயத்தை தொலைத்து அல்லலுற்ற பாமர மக்களின் கண்ணீரைத் துடைக்க முடிந்ததா?

காலங்காலமாகத் தாங்கள் வாழ்ந்த தாயக மண்ணை, உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் அரச படைகள் ஆக்கிரமிக்க, அந்தப் பூமியிலிருந்து வேரடி மண்ணுடன் பிடுங்கி எறியப்பட்ட தமிழர்கள் மீண்டும் தங்கள் பூர்வீக இடங்களுக்குத் திரும்ப முடிந்ததா?

தமிழர் தாயகத்தில் இந்த நான்கு ஆண்டு காலத்தில் எதுவுமே நடக்கவில்லை - துன்பமும், துயரமும் அழியும் அவலமும் தொடர்வதைத் தவிர.

நாட்டின் வடக்கு, கிழக்கு, தெற்கு கரையோரங்களை மோசமாகத் தாக்கி, உலுக்கிய ஆழிப்பேரலைகளினால் உயிர், உடைமை, உற்றார்களைத் தொலைத்து அவலப்பட்ட நமது தமிழ் மக்களின் துயரத்தையாவது-இந்த யுத்த நிறுத்தத்தால் நீக்க முடிந்ததா? இல்லவே இல்லை.

ஆழிப்பேரலை என்ற இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் கடந்த ஒரு வருட காலமாகக் காலத்தை ஓட்டிக்கொண்டிருந்த மக்களை அடுத்த மழைகாலம் ஆரம்பித்து, வெள்ளம் என்ற தனது கொடுங் கரத்தால் மீண்டும் பாடாய்ப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

இப்படித் தமிழர் தாயகத்தில் அவலநிலை தொடர தென்னிலங்கை அரசியல் தலைமைத்துவம் தமிழர்களுக்காக எதுவுமே செய்யாமல் தன்பாட்டில் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கின்றது.

இவ்வாறு காலத்தை ஓட்டித் தமது ஆட்சியைக் கொண்டு நடத்தும் தந்திரோபாயத்தைத்தான் தென்னிலங்கை அரசியல் தலைமைத்துவம் தொடர்ந்து கடைப்பிடிக்கின்றது. அந்தத் தலைமைத்துவத்தில் புதியவர் ஒருவர் வந்திருந்து, காலத்தைக் கடத்துவதற்கான மற்றோர் அத்தியாயத்தை புதிதாக ஆரம்பித்திருக்கின்றார். அவ்வளவே.

கடந்த வருட மாவீரர் தின உரையில் தமிழர்களின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் நேரடியாகவே சுட்டிக்காட்டியமை போன்று "இடைக்காலத் தீர்வுமின்றி, நிரந்தரத் தீர்வுமின்றி, நிலையான அமைதியுமின்றி, நிம்மதியான வாழ்வுமின்றி நாம் அரசியல் வெறுமைக்குள் தொடர்ந்து சிறைப்பட்டுக் கிடக்கமுடியாது. சிங்கள தேசமானது தமிழினத்தை அரவணைத்து, இணைந்து வாழவும் விரும்பவில்லை. அதேசமயம், பிரிந்து சென்று தனித்து வாழவும் விடுவதாகவும் இல்லை. இரண்டும்கெட்டான் நிலையில் விடிவின்றி, விடுதலையின்றி, எதிர்கால சுபீட்சமின்றி, சூனியமான அரசியல் இருட்டுக்குள் நாம் தொடர்ந்து வாழ முடியாது." - என்பதுதான் இன்றைய நிலைமை.

இந்த வெறுமை நிலைக்கு நாம் ஒரு முடிவு கண்டாக வேண்டும். ஒரு தீர்க்கமான தீர்மானம் எட்டப்பட்டாக வேண்டும்.

காலத்தை இழுத்தடிக்கும் தெற்கின் தந்திரத்துக்கு தகுந்த பதிலடி கொடுத்தாக வேண்டும். அடுத்துவரும் நாள்களில் இதற்கான உபாயம் கிட்டும் - வழி பிறக்கும் - வாய்ப்பு ஏற்படும் - என நம்புவோமாக.

அமைதிப் பேச்சுக்கு மீள வருமாறு புலிகளுக்கு அரசுத் தரப்பிலிருந்து விடுக்கப்பட்டிருப்பதாக் கூறப்படும் அழைப்பு, இன்று நாடாளுமன்றத்தில் இலங்கையின் ஜனாதிபதி ஆற்றப்போகும் உரை, இவை எல்லாவற்றுக்கும் முத்தாய்ப்பு வைப்பது போல ஞாயிறன்று தலைவர் பிரபாகரன் ஆற்றப்போகின்ற மாவீரர் தின உரை போன்றவை ஊடாக திட்டவட்டமான தெளிவு நிலை பிறக்கும் என எதிர்பார்க்கலாம்.

## மதகுருமார், கர்ப்பிணிகள், முதியோருக்கு பஸ்களில் இருக்கை ஒதுக்கப்பட வேண்டும்

### சமூகசேவை உத்தியோகத்தர் வலியுறுத்து

வலி.கிழக்கு,நவ.25

வட பகுதியில் மதகுருமார், கர்ப்பிணிகள், முதியோர் ஆகியோருக்கு பஸ்களிலும், மினிபஸ்களிலும் இருக்கைகள் ஒதுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் கோப்பாய் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் வே.தபேந்திரன். இது தொடர்பாக அவர் கூறியதாவது:-

தென் பகுதியில் அரச, தனியார் பஸ்களில் இருக்கைகளில் மதகுருமார், கர்ப்பிணிகள், முதியோர்கள் என எழுத்துக்களால் பொறிக்கப்பட்டு அவர்களுக்கென இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. கடவுச்சீட்டு, முதியோர் அடையாள அட்டையை காட்டினால் இலவசமாக வழங்கப்படுகிறது மருத்துவமனை ஏனைய அரச திணைக்களங்களில் முதியோர்களுக்கான அடையாள அட்டையை காண்பித்தால் முன்னுரிமை வழங்கப்படுகின்றது.

ஆனால் வடபகுதியில் அரச, தனியார் பஸ்களில் மதகுருமார்களுக்கும் கர்ப்பிணிகளுக்கும் முதியோர்களுக்கும் பஸ்களில் பிரத்தியேக இருக்கை இல்லாமல் போய் விட்டது. இதனை மாற்றி அமைக்க வேண்டும். பெரியோரை மதிக்கும் பண்புள்ளம் உடைய கலாசாரத்தை சிதறவிடாது இப்படியான நல்ல எண்ணங்களை பேணிப் பாதுகாப்பது சகலரதும் கடமையாகும் என்றார் அவர்.

60 வயதிற்கு மேற்பட்ட முதியவர்கள் 3 முத்திரை அளவிலான புகைப்படங்களுடன் அந்தந்தப்பகுதி பிரதேச செயலகங்களுக்குச் சென்று இலவசமாக முதியோர் அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார். (ஒ-180)

## உரிமை கோரப்படாத பொருள்கள் யாழ்.நீதிமன்றில் ஏலவிற்பனை

யாழ்ப்பாணம்,நவ.25

பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத சான்றுப்பொருள்கள் நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ்.நீதிவான் நீதிமன்றத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன என்று நீதிமன்றப் பதிவாளர் க.மீரா அறிவித்துள்ளார்.

சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், வானொலிப்பெட்டிகள், வீடியோ சாதனங்கள், மின்பிறப்பாக்கிகள், நகைகள் ஆகியவையே ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

பொதுமக்கள் இப்பொருள்களை விற்பனைக்கு அரை மணி நேரம் முன்னதாக அனுமதிபெற்று பார்வையிடலாம்.

கொள்வனவுக்குரிய கொடுப்பனவுகள் பணமாக மட்டுமே ஏற்கப்படும் என்றும்-

காசோலைகள் ஏற்கப்படமாட்டா என்றும் -பதிவாளர் அறிவித்துள்ளார். (ஒ)

## உதவிப் பொருள் சேகரிப்பு

கடந்த சில நாள்களாகப் பெய்த மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கென நிவாரணப் பொருள்களை வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கம் சேகரித்து வருகின்றது.

இந்தச் சங்கத்தினர் நேற்று யாழ்.குடாநாட்டு வர்த்தகர்களிடம் இருந்து நிவாரணப் பொருள்கள் சேகரித்தனர்.

இன்று வலி.மேற்கு பிரதேச வர்த்தகர்களிடமிருந்து நிவாரணப் பொருள்கள் சேகரிக்கப்படவுள்ளன என்றும்-

சேகரிக்கப்பட்ட நிவாரணப் பொருள்கள் நாளை சனிக்கிழமை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படவுள்ளன என்றும்- சங்கத் தலைவர் தெரிவித்தார். (ஒ-202)

## குடாநாட்டில் வெள்ளப் பாதிப்பு

யாழ்ப்பாணம்,நவ.25

யாழ்.குடாநாட்டில் 8 ஆயிரத்து 327 குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. அதேவேளை, 791 வீடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி இத் தகவல்களைத் தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டில் பருத்தித்துறை பிரதேச செயலர்பிரிவில் அதி கூடிய குடும்பங்களும் வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் அதி கூடிய எண்ணிக்கையான வீடுகளும் பாதிப்படைந்துள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 627 குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன.

வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் 300 வீடுகள் பாதிப்படைந்துள்ளன.

வெள்ளப் பாதிப்புகள்குறித்த சேத மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறு மேலதிக அரச அதிபர் தெரிவித்தார். (ஒ-12-14)

## மழையால் இடம்பெயர்ந்தோருக்கு சுகாதார சேவையினர் அறிவுறுத்தல்

கிளிநொச்சி,நவ.25

கடந்த சில தினங்களாகப் பெய்த மழையால் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள மக்கள் சுகாதார விதிமுறைகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்குமாறு தமிழீழ சுகாதார சேவையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கொதித்தாறிய நீரைப் பருகுதல், உணவுகளை மூடிவைத்தல், ஆறிய உணவை உண்பதற்கு முன்னர் சூடாக்குதல், மலசலம் கழிக்கும் இடங்களைத் துப்புரவாகவும் சுகாதார முறையிலும் பேணுதல் ஆகிய நடைமுறைகளைப் பின்பற்றுமாறு பொதுமக்களை தமிழீழ சுகாதார சேவையினர் கோரியுள்ளனர்.

அத்துடன் வயிற்றோட்டம், வயிற்றுளைவு போன்ற அறிகுறிகள் தென்படின் உடனடியாக மருத்துவ ஆலோசனையைப் பெறுமாறும் சுகாதார சேவையினர் அறிவுறுத்தியுள்ளனர். (ஒ-202)

### மாவீரர் தின நிகழ்வுகளை குழப்புவதற்காக

## குண்டுகளை வெடிக்க வைத்து மக்களை அச்சுறுத்த சிலர் முயற்சி

### எச்சரிக்கின்றனர் விடுதலைப் புலிகள்

கரவெட்டி,நவ.25

குடாநாட்டில் வெடி குண்டுகளை வெடிக்க வைத்து மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தி மாவீரர் தின நிகழ்வுகளைக் குழப்ப சிலர் எத்தனிக்கின்றனர் என்றும் -

ஆனால், மக்கள் எவ்வித பீதியும் இன்றி மாவீரர் தின நிகழ்வுகளில் பங்குபற்றலாம் என்றும் -

தமிழீழ விடுதலைப் புலிகள்அறிவுறுத்தியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் நெல்லியடியில் வெடிச்சத்தம் கேட்டதையடுத்து மக்கள் சிதறியோடினர். வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டன.இதனால் அப்பகுதி வெறிச்சோடியது .இந்தவெடிச்சத்தம் ஏற்பட்டதைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் பீதி நிலை உருவானது.

அந்த வெடிச்சத்தம் மக்களிடையே பீதியை ஏற்படுத்த சிலரால் அவர்களது இடத்திலேயே திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்டதாக அறிய வந்துள்ளதாக விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

இது குறித்துவிடுதலைப் புலிகள் மேலும் கூறுகையில் குண்டுகளை வெடிக்க வைத்து மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்துவதுடன் மாவீரர் தினத்தைக் குழப்புவதற்கும் சிலர் சதி முயற்சிகளில் ஈடுபடுகின்றனர் என்று அறியக்கூடியதாக இருக்கிறது. இது குறித்து மக்கள் எவ்வித அச்சமும் அடையத் தேவையில்லை.மாவீரர் தினத்தை சிறப்புற நடத்த ஒத்துழைப்பை வழங்குங்கள் என்று தெரிவித்துள்ளனர். (ஒ-70-202)

## ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் முதற்றடவை தோற்றுவோருக்கு

யாழ்ப்பாணம்,நவ.25

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு 2006 ஆம் ஆண்டு முதன்முறையாகத் தோற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளும், முதல்முறையாகத் தோற்றி பின் பாடமாற்றம் செய்யும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் பதிவுசெய்ய வேண்டும்.

இவ்வாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு அடுத்த ஆண்டு முதல்முறையாகத் தோற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் முதல் முறை தோற்றிப் பின் பாடமாற்றம் செய்யும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளும்வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் பதிவுசெய்தல் வேண்டும், இதற்கான கட்டணம் 575ரூபா. பதிவுசெய்து தமக்குரிய பதிவு இலக்கத்தைப் பெற்றவர்கள் தமக்குரிய பதிவிலக்கத்தைக் குறிப்பிட்டு 300 ரூபா காசுக்கட்டளையுடன் பரீட்சை ஆணையாளருக்கு விண்ணப்பித்தல் அவசியமானதாகும். மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு பதிவுசெய்ய விண்ணப்பித்தவர்கள் இதுவரை பதிவிலக்கத்தை பெறாதிருப்பின் 026 2223091 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டுபதிவிலக்கத்தை பெற்று உடன் பரீட்சை ஆணையாளருக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவ்வாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (202)

## சுகாதாரத் திணைக்களத்தில் பணிபுரிந்த 60 தொழிலாளர்களுக்கு நிரந்தர நியமனம்

குருநகர்,நவ.25

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை மற்றும் அதன் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளில் அமைய அடிப்படையில் சேவைபுரிந்த 60 தொழிலாளர்களுக்கு பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 13/2005 இன்கீழ் வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளரால் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதில் அமைய அடிப்படையில் சேவை புரிந்த 4 சாதாரண தொழிலாளர்களும் சுத்திகரிப்புத் தொழிலாளர்களாக சேவை புரிந்த 56 பேரும் அடங்குவர். (3-51)

### நாளை

**கார்த்திகை 11**
**சனிக்கிழமை**
**26.11.2005**
**திதி: தசமி**
**முன்னிரவு 07.55 வரை**
**நட்சத்திரம்: உத்தரம்**
**முன்னிரவு 07.25 வரை**
**சுபநேரம்: 03.12 - 04.42**
**ராகுகாலம்: 09.12 - 10.42**
**(யாவும் பழைய நேரப்படி)**

### உதயவாக்கு

**நாம் விரும்புவது விரும்புகின்ற நேரத்தில் விரும்புவதைப் போன்று நடைபெறாமல் இருப்பதாலேயே வாழ்க்கை சுவாரஷ்யமாக உள்ளது.**



# தமிழ்த் தாய் தந்த தலைவா வாழி!

தமிழ்த் தாய் தந்த தானைத் தலைவனே
எங்கள் பிரபாகரனே
அமிழ்தினும் இனிதான அறிவொழியே – பிரபாவே
உங்கள் நாமம் வாழிய வாழியவே!

பார் போற்றும் பண்பான தளபதியே
பகைவரை வென்றிடும் பக்குவம் புரிந்தவரே
ஊர் போற்றும் உத்தம வீரனே! – பிரபாவே
உங்கள் நாமம் வாழிய வாழியவே!

மண்ணை மீட்க மலர்ந்திட்ட மன்னவனே
உன்புகழ் உலகெல்லாம் ஒலிக்கின்றதே
கண்ணை இமைபோல் காத்திடும் எங்கள் காவலனே
பல்லாண்டு காலம் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

கோப்பாய் கல்வியியற் கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர்கள்.

# 51 ஆவது பிறந்தநாள்



## வீரத்தின் சின்னமே வாழ்க!

தமிழ்த்தாய் பெற்றெடுத்த தவப்புதல்வனே வாழ்க
தமிழ் காக்கப் பிறந்த தங்கத் தமிழனே வாழ்க
தமிழ் இனத்தின் தன்னிகரில்லாத்
தலைவனே வாழ்க
ஈழத் தமிழரின் இறைத் தலைவனே
வாழ்க
உலகத் தமிழரின் ஒப்பற்ற
தலைவனே வாழ்க
வையகம் போற்றும் எமதுயிர்த்
தலைவனே வாழ்க
வடமராட்சி ஈன்றெடுத்த மாபெரும்
தலைவனே வாழ்க
வீரத்தின் சின்னமே என்றென்றும் நீ வாழ்க
அகவை ஐம்பத்தொன்று போல் ஆயிரம் அகவை பெற
வாழ்த்துகின்றோம்

திருநெல்வேலி வர்த்தக சங்கமும்
இந்துவாலிபர் சங்கமும்


## குவைத் யுத்த நட்டஈடு வழங்க அழைக்கப்பட்டோர் விவரம்

வலி.கிழக்கு,நவ.25

1990-1991 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இடம்பெற்ற வளைகுடா யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு மீண்டும் இலங்கை திரும்பி நஷ்டஈடு பெறாது நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் வசிப்போரை தம்முடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலர் திருமதி எஸ்.தெய்வேந்திரன் கேட்டுள்ளார்.

இந்த நட்ட ஈட்டைப் பெற அங்கீகரிக்கப்பட்டவர்களில் அழைக்கப்பட்டவர்களின் விவரம் வருமாறு:

எம்.கே.தியாகரத்தினம், ஜமுனாவீதி, நல்லூர், எம்.ஆனந், கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, எஸ்.சிவராசா , இல. 46, நாயன்மார் வீதி, நல்லூர், எஸ்.இராசரத்தினம் , இல. 126, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, கே.என். சிறிபதி , இல.148, இராஜேஸ்வரி வீதி, அரியாலை, என்.றோசி, இல.104, ஆனந்தன் வடலி வீதி, அரியாலை, எம்.செல்வநாயகம், திருநெல்வேலி தெற்கு, ரி.சத்தியானந்தன், முருகன் வீதி, கலாசாலை வீதி, திருநெல்வேலி, எ.சுரேஷ்குமார், பல்கலைக்கழகவீதி, கொக்குவில் கிழக்கு, கே.வைத்திலிங்கம், இல.88/2, பத்திரகாளி கோவிலடி, திருநெல்வேலி, ஆர்.கணேஸ்வரன், குளப்பிட்டி வீதி, பிள்ளையார் கோயிலடி, கொக்குவில் கிழக்கு, எஸ்.பாலசிங்கம், கொக்குவில் கிழக்கு, என்.சிவகுமார், நந்தாவில் வீதி, கொக்குவில், எம்.ரி.சிவகுமார், நாகலிங்கம் வீதி, கொக்குவில் மேற்கு, சி.ஏ.சிவரத்தினம், பிறவுண் றோட், கொக்குவில் கிழக்கு, என்.ஜெயக்குமார், கொக்குவில் மேற்கு, எ.தவராசா, உடையார் வீதி, கொக்குவில் கிழக்கு, எம்.ரகுராஸ், ரயில்வே பாதைவீதி, கொக்குவில் மேற்கு, வி.நமசிவாயம், இல.112, முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணை தெற்கு, எஸ்.எஸ். துரை சிங்கம், இல.29, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், ரி.தர்மராஜாசேகரம், மே/பா. கே.இராசலிங்கம், "காந்திவாசா" 13.R, நீராவியடி, எஸ்.எஸ்.ரவிச்சந்திரன், இல.31/1, பிறவுண்றோட், கொக்குவில் கிழக்கு, ரி.புலேந்திரன், இல.54, சீனியர் லேன், கொக் குவில், எஸ்.ஜே.திருநாவுக்கரசு, கோண்டாவில் வடக்கு, எஸ்.முரளீதரன், கோண்டா வில் தெற்கு. (ஒ-180)

## தொட்டிலடி வீதி புனரமைக்கப்பட்டது

யாழ்ப்பாணம்,நவ.25

நீண்டகாலமாக சேதமடைந்திருந்த சண்டிலிப்பாய் - தொட்டிலடி - மடத்தடி வீதி புனரமைக்கப்பட்டுள்ளது.

கடந்த 50 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாமல் இருந்த இந்த வீதியால் பொதுமக்கள் பயணிப்பதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இத்தகைய நிலையினை அப்பகுதி மக்கள் மானிப்பாய் பிரதேச சபையிடம் மகஜர் ஒன்றின் மூலம் தெரியப்படுத்தினர்.

இதனையடுத்து இவ்வீதி தற்போது புனரமைக்கப்பட்டுள்ளது. (-13)

## கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,நவ.25

ஹற்றன் நஷனல் வங்கி பாடசாலை, கழகங்களுக்கு இடையே நடத்தும் கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி இன்று பிற்பகல் 3 மணியளவில் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இன்றைய போட்டியில் பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியும் சென். ஜோன்ஸ் கல்லூரி ஏ அணியும் மோதுகின்றன.

பிற்பகல் 4.15 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியும் சென்.ஜோன்ஸ் கல்லூரி பி அணியும் மோதுகின்றன. (ஒ-190)


**சுனாமியால் பாதிக்கப்பட்ட வியாபார நிலையங்களைப் பதிதல்**

நேற்று (24.11.2005) வியாழக்கிழமை உதயனில் 08 பக்கத்தில் வந்த புதிய அங்கத்தவர்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட வியாபார நிலையங்களைப் பதிதல் என்ற விளம்பரத்தில் பதிவுகளை கீழ்க்காணும் முகவரியில் மேற்கொள்ளவும்.

தலைவர்,
பருத்தித்துறை வர்த்தகர் சங்கம்,
பிரதான வீதி, பருத்தித்துறை
(#/46887)(52-11-45)

## மரண அறிவித்தல்

### இரத்தினசாமி செல்வநாதன் (செல்வம்)



ஐயனார் கலட்டி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசாமி செல்வநாதன் 21.11.2005 இல் அகால மரணமானார்.

அன்னார் இரத்தினசாமி - ராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் ரூபகுமாரியின் அன்புக் கணவருமாவார்.

இவரின் இறுதிக்கிரியைகள் 23.11.2005 இல் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தற்போதைய முகவரி:
கந்தர் உடையார் ஒழுங்கை,
வி.எம். றோட், பருத்தித்துறை.
(48184)(52-11-19)

தகவல்:
குடும்பத்தினர்.

# மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு பெற்றோரை அழைத்துச் செல்ல வாகன சேவை ஏற்பாடு

எதிர்வரும் 27 ஆம் திகதி மாவீரர் நிகழ்விற்கு மாவீரர் துயிலும் இல்லங்களிற்குச் செல்லும் மாவீரர்களின் பெற்றோர்களுக்கு வாகன சேவை ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

இதன்படி வன்னிப் பிரதேசத்தில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களிற்குச் செல்லும் பெற்றோர்களுக்கு வாகனசேவை உள்ளூர் தரிப்பிடங்களிலிருந்து பிரதான தரிப்பிடங்களுக்கு காலை 6 மணி தொடக்கம் காலை 8 மணிவரை நடைபெறும். பிரதான தரிப்பிடத்திலிருந்து நேரடியாக துயிலும் இல்லங்களிற்கு காலை 8 மணிதொடக்கம் காலை 10 மணிவரை நடைபெறும்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள துயிலும் இல்லங்களிற்கு செல்லும் பெற்றோர்களிற்கான வாகன சேவை உள்ளூர் தரிப்பிடங்களிலிருந்து காலை 11 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை நடைபெறும்.

இதற்கான பிரதான தரிப்பிடங்களில் வலிகாமம், தீவகம், யாழ். நல்லூர் கோட்டங்களிற்கான பிரதான தரிப்பிடமாக நல்லூர் கந்தசுவாமி ஆலயம் -

வடமராட்சிக் கோட்டத்திற்கான பிரதான தரிப்பிடமாக நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் -

தென்மராட்சிக் கோட்டத்திற்கான பிரதான தரிப்பிடமாக கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம் -

பிரதான தரிப்பிடங்களுக்கான உள்ளூர்த்தரிப்பிடங்கள் வருமாறு:

**வடமராட்சிக் கோட்டம்**

**கரவெட்டிப் பிரதேசம்:** விக்கினேஸ்வரா கல்லூரி, வளர்மதி கரவெட்டி, காசிநாதர் வித்தியாலயம் துன்னாலை, அல்வாய் முத்துமாரி அம்மன் வித்தியாலயம், கப்புது.

**உடுப்பிட்டிப் பிரதேசம்:** உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, குஞ்சர் கடை, இமையாணன் சனசமூக நிலையம், முத்துமாரி அம்மன், கெருடாவில் கொண்டலடி, உடுப்பிட்டி மகளிர்.

**பருத்தித்துறைப் பிரதேசம்:** வல்வெட்டித்துறை ஆதிகோயிலடி, பொலிகண்டி க.தொ.கூ.சங்கம், பருத்தித்துறை சிவன் கோயிலடி, கற்கோவளம் பாடசாலை, அம்பன் பாடசாலை, பொற்பதி குடத்தனை, மணற்காடு பாடசாலை, கிராமக்கோடு ப.நோ.கூ.சங்கம், மந்திகை கல்வி வலயம்.

**தென்மராட்சிக் கோட்டம்**

**கொடிகாமப் பிரதேசம்:** வரணி மகாவித்தியாலயம், மந்துவில் ஸ்ரீ பாரதி, மந்துவில் அ.த.க. பாடசாலை, மிருசுவில் அ.த.க. பாடசாலை, படித்த மகளிர் திட்டம், துர்க்கை அம்மன் கோயிலடி, உசன் வைத்தியசாலை, விடத்தல் பளை அ.த.க.பாடசாலை, கச்சாய் அம்மன் கோயிலடி, மீசாலை மாவடிப் பிள்ளையார் கோயிலடி, வடக்கு வரணி இடைக்குறிச்சி, தவசிகுளம்.

**சாவகச்சேரி பிரதேசம்:** மட்டுவில் மகாவித்தியாலயம், டிறிபேர்க் கல்லூரி, சரசாலை கமலாசினி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி, மீசாலை விக்கினேஸ்வரா, கல்வயல் கண்ணன் பாடசாலை, மோகனதாஸ் மட்டுவில், மு.சிறி.அம்மன் சனசமூக நிலையம், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன், கைதடி நுணாவில் சனசமூக நிலையம், நுணாவில் சந்தி.

**கைதடிப் பிரதேசம்:** நாவற்குளி மகாவித்தியாலயம், கைதடி முத்துக்குமாரசுவாமி, கைதடி வடக்கு உதயசூரியன், நவபுரம் வடக்கு.

**வலிகாமம் கோட்டம்**

**உடுவில் பிரதேசம்:** தாவடி பிள்ளையார் கோயிலடி, கோவில் வாசல் சந்தி இணுவில், முருகமூர்த்தி பாடசாலை உடுவில், இராமநாதன் கல்லூரி மருதனார்மடம், சுன்னாகம் பஸ்தரிப்பு நிலையம், ஸ்கந்தவரோதயக் கல்லூரி கந்தரோடை, தபாற்கந்தோர் சந்தி ஏழாலை, ஆயக்கடவை பிள்ளையார் கோயிலடி புன்னாலைக்கட்டுவன், குப்பிளான் சந்தி, சிறி முருகன் சனசமூக நிலையம்.

**யாழ்.நல்லூர்ப் பிரதேசம்:** நாவாந்துறை பாடசாலையடி, பாசையூர் அந்தோனியார் கோயில், குருநகர் சமாசமுன்றில், கொக்குவில் இந்துக்கல்லூரி, பாற்பண்ணை பாடசாலையடி, கோண்டாவில் வாகீஸ்வரி சனசமூக நிலையம், ஆறுகால் மடம் சனசமூக நிலையம், கொழும்புத்துறை துண்டிச்சந்தி, அரியாலை சனசமூக நிலைய முன்றில்.

**சண்டிலிப்பாய் பிரதேசம்:** மாதகல் மாதா கோயில், பண்டத்தரிப்பு சந்தி, இளவாலை சந்தி, விளான் மாதா கோயில், சண்டி இரட்டைத் தலை வைரவர், சீரணி கோயில் சந்தி, கட்டுடை சந்தி, கட்டுடை சுபாஸ் சனசமூக நிலையம், நவாலி சென். பீற்றஸ் தேவாலயம், பள்ளங்காடு உதயதாரகை, சாவற்கட்டு சந்தி சனசமூக நிலையம், உயரப்புலம் நாயகி சனசமூகநிலையம், ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோயிலடி.

**அச்சுவேலிப் பிரதேசம்:** ஆவரங்கால் சிவன், அச்சுவேலி பேருந்து நிலையம், எல்லாளன் சனசமூக நிலையம், ஈவினை சனசமூக நிலையம்.

**தெல்லிப்பழைப் பிரதேசம்:** அளவெட்டி ப.நோ.கூ. சங்கம், துர்க்கை அம்மன் கோயிலடி தெல்லிப்பழை, பழம் பிள்ளையார் கோயில் மல்லாகம், உப தபாற் கந்தோரடி கட்டுவன்.

**கோப்பாய்ப் பிரதேசம்:** புத்தூர் சோமஸ்கந்தர், உரும்பிராய் சைவத் தமிழ், உரும்பிராய் மூன்று கோயில், கோப்பாய் மகாவித்தியாலயம், இருபாலை கந்தசுவாமி கோயில், கோப்பாய் முருகன் கோயில், நீர்வேலி காமாட்சி சனசமூக நிலையம், நீர்வேலி கந்தசுவாமி கோயிலடி.

**சங்கானைப் பிரதேசம்:** அராலி இந்துக் கல்லூரி, வட்டு. இந்துக் கல்லூரி, சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம், சுழிபுரம் விக்கினேஸ்வராக் கல்லூரி, வட்டு மத்திய கல்லூரி, அராலி சரஸ்வதி வித்தியாலயம்.

**தீவகக் கோட்டம்**

**வேலணைப் பிரதேசம்:** சாட்டி சந்தி, செட்டி புலம் சந்தி, நேதாஜி சந்தி, மண்கும்பான், அல்லைப்பிட்டி, ஆதியடிவைரவர் கோயில், ஏ.பி.சி. அலுவலகம், வங்களாவடி சந்தி, துறையூர் சந்தி, கெட்டில் சந்தி, கண்ணகை புரசந்தி, முடிப்பிள்ளையார் கோயிலடி, சிப்பன முருகன் கோயிலடி, வேலணை ப.தெ.கூ. சங்கம், இலந்தக்காட்டு பிள்ளையார் கோயிலடி

**ஊர்காவற்றுறை பிரதேசம்:** மெலிஞ்சிமுனை பாடசாலை, சுருவில் கிரா.முன்.சங்கம், கரம்பன் பாங்கட்டு சந்தி, அம்மாபுலம் சந்தி, தம்பாட்டி வாசிகசாலை, நகர்ப்பகுதி அரசியல்துறை, புளியங்கூடல் அம்மன் கோயிலடி, சின்னமடு பாடசாலையடி, சரவணை சந்தி, நாரந்தனை வடக்கு, செல்லப்பா மைதானத்தடி செருக்கன் சந்தி.


**காரைநகர் பிரதேசம்:** சைவ மகாசபை

**புங்குடுதீவுப் பிரதேசம்:** உடுப்பட்டி சந்தி, பெருங்காட்டுச் சந்தி, அம்மாகடைச் சந்தி, மடத்துவெளிச் சந்தி, குறிகாட்டுவான் ஜெற்றி.

- இவ்வாறு மாவீரர் நாள் ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது.




# முதல் மாவீரர் லெப்.சங்கர்



தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் முதல் மாவீரர் லெப்டினன்ட் சங்கர் - சுரேஷ் (செ.சத்தியநாதன்) வீரச்சாவடைந்த நவம்பர் மாதம் 27ஆம் திகதியை மாவீரர் தினமாக 1990 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் பிரகடனப்படுத்தினர்.

வடமராட்சி, கம்பர்மலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர் செ.சத்தியநாதன். 1961 ஆம் ஆண்டு ஜூன் 19ஆம் திகதி பிறந்த இவர், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து லெப்டினன்ட் சங்கர் ஆனார். 1982ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் சாவகச்சேரி பொலீஸ் நிலையம் மீதான தாக்குதலில் காயமடைந்தவர்களுக்கு யாழ்ப்பாணம், நாவலர் வீதியிலுள்ள ஒரு வீட்டில் வைத்து சிகிச்சையளிக்கப்பட்டது. அந்த வீட்டை இராணுவம் சுற்றி வளைத்தது.

அவ்வேளை அங்கிருந்த சங்கர் இராணுவத்தினரை நோக்கித் தான் வைத்திருந்த கைத்துப்பாக்கியால் சுட்டவாறே தப்பிச்சென்றார். ஆனாலும் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டில் அவர் வயிற்றில் படுகாயமடைந்தார்.

அப்போதும் கூட இரண்டு மைல் தூரம் ஓடிச்சென்று தனது தோழர்களின் இருப்பிடத்தை அடைந்தார். அங்கு தன் தோழர்களிடம் கைத்துப்பாக்கியை ஒப்படைத்து விட்டே நினைவிழந்தார்.


முதல் மாவீரரின் நினைவுத்தூபி

விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டமாகையால் போதிய மருத்துவ வசதி இங்கு ஏற்படுத்தப்படவில்லை. அதனால் அவர் விசைப் படகு மூலம் கடல் மார்க்கமாகத் தமிழகத்துக்கு அழைத்துச் செல்லத் திட்டமிடப்பட்டது.

இராணுவத் தேடுதல்கள், முற்றுகைகள் போன்றவற்றைத் தாண்டி அவர் தமிழகம் சென்றடைய ஒருவார காலமாகியது.

தமிழகத்தில் தலைவர் பிரபாகரனைக் கண்டு பேசிய சங்கரின் உடல்நிலை வயிற்றில் ஏற்பட்ட காயத்தால் மோசமடைந்தது.

அவரது உயிரைக் காப்பாற்ற எடுத்த முயற்சிகள் பயனற்ற நிலையில் தலைவரும் தோழர்களும் கண்கலங்கி நிற்க, 1982ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் முதற்களப்பலியாகும் பெருமையை அணைத்துக்கொண்டார் லெப்டினன்ட் சங்கர். அந்த நாள் தமிழ்த்தேசிய போராட்ட வரலாற்றில் முதன்மையிடத்தைப் பிடித்துள்ளது.

# சமாதானத்துக்கான காலத்திலும் 234 போராளிகள் வீரச்சாவு

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் 15.11.2005 வரை 17 ஆயிரத்து 903 போராளிகள் மாவீரர் பேறடைந்துள்ளனர் எனத் தமிழீழ மாவீரர் பணிமனை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இவர்களில் தரைக்கரும்புலிகள் 79 பேரும், கடற்கரும்புலிகள் 184 பேரும், எல்லைப்படையினர் 279 பேரும் வீரச்சாவடைந்து மாவீரர் பேறடைந்துள்ளனர்.

27.11.1982 தொடக்கம் 15.11.2005 வரை 14 ஆயிரத்து 98 ஆண் மாவீரர்களும் 3 ஆயிரத்து 805 பெண் மாவீரர்களும் வீரச்சாவடைந்துள்ளனர்.

சமாதான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட ஆண்டிலிருந்து இன்றுவரை 234 பேர் வீரச்சாவடைந்துள்ளனர்.

2002 ஆம் ஆண்டு 45 மாவீரர்களும், 2003 ஆம் ஆண்டு 72 மாவீரர்களும், 2004 ஆம் ஆண்டு 79 மாவீரர்களும், 2005 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம் திகதி வரை 38 மாவீரர்களும் வீரச்சாவடைந்துள்ளனர்.

முக்கியமுகாம் தகர்ப்புகள் மற்றும் படை நடவடிக்கைகளில் 7 ஆயிரத்து 442 மாவீரர்கள் வீரச்சாவடைந்துள்ளனர். இந்தத் தகவல்களை உள்ளடக்கி வீரச்சாவடைந்த மாவீரர்களின் தொகுப்பு தமிழீழ அரசியல் துறையின் மாவீரர் பணிமனையால் வெளியிடப்பட்டுள்ளது. (ஒ-202)

# மாவீரர் தின நிகழ்வுகள்

புங்குடுதீவுப் பிரதேச மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு புங்குடுதீவு- நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

அதேவேளை- மாவீரர் எழுச்சி வாரத்தை முன்னிட்டு இப் பிரதேசத்திலுள்ள அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சனசமூக நிலையங்களில் மஞ்சள், சிவப்புக் கொடிகள் கட்டப்பட்டுப் பதாதைகளும் வைக்கப்பட்டுள்ளன. (ரி-202)

* * *

அரியாலை,நவ.25

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை நடத்தும் மாவீரர் எழுச்சி நாள் நிகழ்வும் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பும் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பொதுச் சுடரேற்றல், ஈகச் சுடரேற்றல், அக வணக்கம், வரவேற்புரை, மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு என்பன இடம்பெறும். நிகழ்வில் மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களான செ.கனகசபாபதி, பொ.சிவலிங்கம், சி.ஐயாத்துரை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டு உரையாற்றுவார்கள். (ஒ-17)

* * *

நீர்வேலி, சிறுப்பிட்டி மேற்கில் ஜனசக்தி சனசமூக நிலைய ஏற்பாட்டில் இன்று பிற்பகல் 5 மணியளவில் மாவீரரின் பெற்றோர் கௌரவிப்பும் நினைவுப் பேருரையும் நடை பெறவுள்ளன.

* * *

மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு இன்று விக்கினேஸ்வராக் கல்லூரியில் காலை 8.30 மணிக்கும், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் காலை 9.30 மணிக்கும் பருத்தித்துறை வேலாயுதம் வித்தியாலயத்தில் முற்பகல் 10 மணிக்கும் இடம்பெற உள்ளது. (ஒ-70)

# யாழ்.பல்கலை. வளாகத்தில் மாவீரர் நினைவுத் தூபி திறப்பு

யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினால் யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் நிறுவப்பட்ட மாவீரர் நினைவுத் தூபியை நேற்று முற்பகல் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் திறந்து வைத்தார்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் சி.விஜயரூபன் நிகழ்விற்கு தலைமை வகித்தார்.

பொதுச்சுடரினை யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவசந்திரன், முகாமைத்துவ பீடாதிபதி தேவராஜா, யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கச் செயலாளர் ஆழ்வாப்பிள்ளை, யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் சி.தங்கராஜா, யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதி எஸ். சிவபாலன், விவசாய பீட பீடாதிபதி க.இராசதுரை ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியை யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் செயலாளர் எஸ். சிவகரன் ஏற்றினார்.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் நினைவுத் தூபியின் கல்வெட்டினை திரைநீக்கம் செய்து வைத்தார்.

நினைவுத் தூபிக்கான மலர் மாலையினை யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவரும் மாவீரர் கப்டன் யூட்டின் சகோதரனுமான எஸ்.செல்வகுமார், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையைச் சேர்ந்த குகன் ஆகியோர் அணிவித்தனர்.

அவர்களைத் தொடர்ந்து பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவ, மாணவியர் மலரஞ்சலி செலுத்தினர்.

நினைவுரைகளை உயர்பட்டப் படிப்புகள் பீட பீடாதிபதி க.கந்தசாமி, யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தலைவர் பேராசிரியர் சிவானந்தமூர்த்தி, யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ச.மோகனதாஸ், ஊழியர் சங்கத் தலைவர் சி.தங்கராஜா ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

(ஒ-7-86)

மாவீரர் தினத்தை யொட்டி நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக்கு அருகே அமைக்கப்பட்டுள்ள வளைவு. (படம்: பிரபா)




## மாணவர் பேரவையில் பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்,நவ.25

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை தமிழீழ மாவீரர் தினத்தை முன்னிட்டு நடத்திய கவிதைப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பேரவை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்ததினத்தை முன்னிட்டு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு பேரவை சைக்கிள்களை அன்பளிப்பாக வழங்கவுள்ளது. (202)

# 3ஆவது பிறந்த தின வாழ்த்து




யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட ரஞ்சித் - அனிற்றா தம்பதியரின் செல்வப்புதல்வி **ஹெமி** தனது மூன்றாவது பிறந்தநாளை இன்று (25.11.2005) வெள்ளிக்கிழமை லண்டனிலுள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, செந்தூரன் மாமா, கவிதா (லண்டன்) சித்தி, ஜென்சி ஸ்ரீபன் (பிரான்ஸ்), இலங்கையில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, ஆசை மாமா தர்சன், பப்பி சித்தி மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் பல்கலையும் கற்று நோய் நொடியின்றி பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

**189, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**
(43157)(52-11-15)

**தகவல்**
**செ, இராசநாயகம் (அம்மப்பா)**

kit

## நத்தார் - புதுவருடத்தை முன்னிட்டு அளப்பரிய அன்பளிப்புகள் இனாம்

WESTERN UNION MONEY TRANSFER

வெளிநாட்டிலிருந்து உறவினர்கள்
**WESTERN UNION** மூலம் பணம் அனுப்பி பணப் பரிமாற்றல் இலக்கம் (MTCN 10 இலக்கங்கள்) உங்கள் கைகளில் கிடைத்துவிட்டதா?
வங்கிக்கணக்கு தேவையில்லை, 24 மணி நேரமும் ஒருசில நிமிடங்களில் உங்கள் கைகளில் பணத்துடன் அன்பளிப்பும் கிடைக்க உடன்நாடுங்கள்.
மேலும் சகல விதமான தொலைபேசி அட்டைகள் Dialog GSM இணைப்புகள் (SIM) மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும்,
உள்நாட்டு, வெளிநாட்டுக் கடிதங்கள், பொதிகள் உடனுக்குடன் அனுப்பிட




**SRI MURUGAN**
**TELE COMMUNICATION AGENCY POST OFFICE**
303, K.K.S. ROAD, JAFFNA. T.P. : 021 222 5392.
E.mail : srimurugan@eureka.lk
இன்னும் பல சேவைகளையும், அன்பளிப்புகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளவும்.

# பதவியேற்று 2 மணிநேரத்தில் ராஜினாமாச் செய்தார் ஸ்ரீபதி

கொழும்பு,நவ.25

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் அமைச்சரவை அந்தஸ்து அற்ற அமைச்சராகப் பதவியேற்றுக் கொண்ட இரண்டு மணி நேரத்திற்குப் பின்னர் அமைச்சுப் பதவியை இராஜினாமாச் செய்தார் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரொருவர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு மிகவும் நெருக்கமானவரான ஸ்ரீபதி சூரியாராய்ச்சியே இவ்வாறு பதவியை இராஜினாமாச் செய்தவராவார். நேற்று முன்தினம் முற்பகல் அவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் வாழ்க்கைத்திறன் தொழில் வாய்ப்பு அமைச்சராகப் பதவியேற்றார்.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் மஹிந்த ராஜபக்ஷவுடன் தோளோடு தோளாக நின்று செயற்பட்ட ஸ்ரீபதி சூரியாராய்ச்சி மஹிந்தவின் வெற்றிக்காகப் பாடுபட்டார். அவரது தலைமையிலான ஆட்சியில் முக்கிய அமைச்சுப் பொறுப்பொன்று தனக்குவழங்கப்படுமென்று எதிர்பார்த்திருந்தார்.

ஆனாலும், அவருக்கு உப்புச்சப்பில்லாத அமைச்சு ஒன்று வழங்கப்பட்டது. அதுவும் அமைச்சரவை அந்தஸ்து அற்ற அமைச்சு பொறுப்பே அதுவென்பதால் ஸ்ரீபதி பெரிதும் ஆத்திரமடைந்தார். தேர்தல் காலத்தில் மஹிந்த ராஜபக்ஷவை ஓரங்கட்டிய நபர்களுக்கு முக்கிய அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டிருப்பதால் கடும் விசனமடைந்த அவர் நேற்றுமுன்தினம் பிற்பகல் தனது இராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பிவிட்டார்.

தாம் சட்டத்தரணி என்பதால் தமக்கு அதிகமான வேலைப்பளு இருப்பதாகவும் இதனால் அமைச்சுப் பொறுப்புக்களை வகிப்பதில் தமக்கு சிரமங்கள் இருப்பதாகவும் ஸ்ரீபதி சூரியாராய்ச்சி தனது இராஜினாமாக் கடிதத்தில் சுட்டிக்காட்டியிருக்கிறார் எனக் கூறப்படுகிறது. (க-13)

## காங்கேசன் சிமெந்துப் பொதுத் தொழிலாளர் யூனியன்

## விசேட பொதுக்கூட்டம்

காலம் : *04.12.2005*
நேரம் : *முற்பகல் 9.30 மணி*
இடம் : *யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபம்*

மேற்படி யூனியனின் ஆயுட்காலம்/ நிதி/ சொத்துகள் போன்றவற்றின் இறுதி முடிவு எடுக்கப்டும்.

யூனியன் நன்கொடைப் பணம் இதுவரை பெற்றுக் கொள்ளாத அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகம் தரவும்.

தலைவர்/ செயலாளர்,
காங்கேசன் சிமெந்துப் பொதுத் தொழிலாளர் யூனியன்.

(43169)(26-15-45)

# மரண அறிவித்தல்



## யோசப் குலசிங்கம்

இளவாலையைச் சேர்ந்த யோசப் குலசிங்கம் அவர்கள் கடந்த 23.11.2005 புதன்கிழமை காலமானார்.

அன்னார் சூசப்பிள்ளை சுவாம்பிள்ளை - சவரிமுத்து லுவிசாப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் சவரிமுத்து ஞானப்பிரகாசம்-சூசப்பிள்ளை மரியப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் யூபிறேசியா ஞானப்பிரகாசத்தின் அன்புக் கணவரும் லுயிசா குலோஜனி, அலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் மேரிதிரேசா (நியூசிலாந்து), அன்னம்மா (நியூசிலாந்து), அருட் சகோதரி மேரி பேர்ணர்டா (Holy Cross) ஆகியோரின் அன்புச் சகோதரனும் யஸ்மின் சொலின் (நியூசிலாந்து), விறாங்பீற்றர் (நியூசிலாந்து), விறாங்யோசப் (லண்டன்), ராதா (நியூசிலாந்து), ரவி (நியூசிலாந்து), ரஞ்சி (கட்டார்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஞானரட்ணம் (கனடா), ஞானச்சந்திரன் (திருகோணமலை), ஞானேந்திரன் (கனடா), ஞானமித்திரன் (லண்டன்) காலஞ்சென்றஞானராஜன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.11.2005) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் புனித அன்னம்மாள் ஆலயத்தில் இறுதித்திருப்பலியின் பின் பூதவுடல் புனித அன்னம்மாள் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அருந்தார் ஒழுங்கை, இளவாலை. (43170) 19-26-15-45) தகவல்: மனைவி.

## கதிர்காமர் கொலை வழக்கில் மனு

கொழும்பு,நவ. 25

முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டு கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் வவுனியா இளைஞர் ஒருவர் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவைச் சேர்ந்த சிவராசன் சிவரஞ்சன் என்பவர் சார்பில் சட்டத்தரணி கௌரி சங்கரி தவராஜா இந்த மனுவைத் தாக்கல் செய்தார்.

இந்த மனுவில் கொழும்பு குற்றப் புலனாய்வு பிரிவின் பணிப்பாளர் சரத் லுகொட, கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவின் இன்ஸ்பெக்டர் நுவன் வெத்தசிங்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்-மேஜர் ஜெனரல் அசோக ஜயவர்தன, பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மனுதாரர் தாம் வவுனியாவில் தொலைபேசிக்கான 'ஸிம்' அட்டைகளை விற்பனை செய்பவர் என்றும்- தம்மிடம் திருச்செல்வம் என்பவர் வாங்கிய 'ஸிம்' அட்டை லக்ஷ்மன் கதிர்காமர் கொலைச் சந்தேக நபர்களால் பாவிக்கப்பட்டதாகத் தெரிவித்து அதுகுறித்து விசாரணை செய்யத் தம்மை வருமாறு அழைத்தனர் என்றும்-

அதற்காக கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவுக்குச் சென்ற தம்மை அங்கு தொடர்ந்து நீண்டகாலம் தடுத்து வைத்திருக்கின்றார்கள் என்றும்-மனுதாரர் தமது மனுவில் தெரிவித்திருக்கிறார்.

எதுவித காரணங்களுமின்றி, கைதுக்கு காரணம் கூடக் காட்டாமல், தடுப்புக் காவல் உத்தரவும் விடுக்கப்படாமல் தம்மை தடுத்து வைத்திருக்கின்றனர் என்றும், தமது அடிப்படை உரிமை மீறும் நடவடிக்கை என்றும் மனுதாரர் தம் மனுவில் தெரிவித்திருக்கிறார். (க)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ.25

நாடாளுமன்ற தமிழ் சுருக்கெழுத்தாளர் பதவிக்கு விண்ணப்பிப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் கழக உறுப்பினர்களான வேலையற்ற முன்னாள் பயிலுநர்களைக் கலந்துகொள்ளுமாறு கழகச் செயலாளர் கேட்டுள்ளார். (3-202)

## நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சு

## வடக்கு - கிழக்கு மாகாணசபை

## வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டம் - II

(நீகோட் - II)

நிதி - ஆசிய அபிவிருத்தி வங்கி
ஆஅவ கடன் இல:- 2168 -சிறீ (எஸ்எவ்)

## கேள்வி அறிவித்தல் - இல: 62

குடிசார் வேலைகளைப் பெறுதல்

1. வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டம் (NECORD-II) ஆகுசெலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. இதன் பின்னால் தொழில்தருநராகக் குறிப்படப்படும் NECORD திட்டக் கேள்விச் சபைத் தலைவரால் பின்வரும் வேலைகளுக்குத் தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

### அட்டவணை

| தொ. இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த ICTAD பதிவு | கேள்விப் பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | NEP/NECORD-II/ID/01 | திருகோணமலை, உப்புவெளி முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிலைய மூன்று மாடி நிர்மாணம் | M4 கட்டடங்கள் | 260,000/- |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களும் கேள்வி கோருவதற்குத் தகுதி உடையவர்கள்.
   - I. நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் ICTAD விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரராகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   - II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச.) உறுப்பினராக விளங்கவேண்டும்.
   - III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்தோ அல்லது உசாவலர்களிட மிருந்தோ பெறப்பட்ட திருப்திகரமான சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்குமாறு கேள்வி கோருவோர் வேண்டப்படுகின்றனர்.
   - IV. 'ICTAD' வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டாவறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலை வைக் கொண்டிருக்கவேண்டும்.
   - V. ஒப்பந்தகாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்குத் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அடங்கலாகாது.
   - VI. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்க கூடியவராக இருக்க வேண்டும்.
4. ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.
5. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் கேள்வி தொடர்பான மேலதிகத் தகவல்களை திட்டப்பணிப்பாளர், நீகோட் திட்டம், 55,கந்தசுவாமி கோயில் வீதி, திருகோணமலையில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 026-2227434, ஃபக்ஸ்: 026-2227401. இணையத்தள முகவரி: WWW.necord.org, ஈமெயில்: necord@sltnet.lk)
6. கேள்வி ஆவணங்களை 25.11.2005 இலிருந்து 12.12.2005 வரை முற்பகல் 9.30 மணியிலிருந்து பிற்பகல் 3 மணி வரை வேலை நாள்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா. 2,000/- ஐச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
7. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் தனியாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும் கேள்வி கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், இதன் தொடர்பாகப் பந்தி 8 இல் குறிப்பிட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.
8. பொறிவைத்த கேள்விகள் யாவும் தலைவர், திட்ட கேள்விச்சபை, "நீகோட்", 55, கந்தசுவாமி கோயில் வீதி, திருகோணமலை என்ற விலாசமிடப்பட்டு, 19.12.2005 முற்பகல் 11.30 மணிக்கு முன்பதாக கிடைக்கவேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கமுடியும்.
9. முன்கூட்டியே கேள்விகோரல் பற்றியகூட்டமொன்று எமது அலுவலகத்தில் 12.12.2005 ஆம் திகதி அன்று முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறும்.
10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்வி கோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவினங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

**த.லங்காநேசன்,**
தலைவர், கேள்விச் சபை,
வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டம்,
55, கந்தசுவாமி கோயில் வீதி, திருகோணமலை. (சி/46316)(26-15-45)

# மழையால் அழிந்த வாழைகளுக்கு நட்டஈடு வழங்கக் கோரிக்கை

இயற்கை அனர்த்தங்களால் அழியும் பயிர்களுக்கு நட்டஈடு வழங்கப்படுவதுபோன்று மழையினால் வாழைத் தோட்டங்கள் அழியும்போதும் நட்டஈடு வழங்கவேண்டும்.

இவ்வாறு வாழைத்தோட்ட உரிமையாளர்கள் கோருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து பெய்த மழையாலும் இடையிடையே வீசிய கடும் காற்றாலும் ஆயிரக்கணக்கான வாழைகள் அழிந்துள்ளன.

ஏழாலை, கட்டுவன், குப்பிளான், நீர்வேலி, மல்லாகம், தெல்லிப்பழைப் பகுதிகளில் உள்ள வாழைத் தோட்டங்களில் வாழைகள் முறிந்து வீழ்ந்துள்ளன.

கடந்த காலங்களில் குடாநாட்டில் வாழைத்தோட்டங்கள் அழிந்த போது இதற்கான நட்டஈடு வழங்கப்பட்டதில்லை.

இந்த வகையில் ஏனைய பயிர் அழிவுகளுக்கு வழங்குவதுபோன்று வாழைகளின் அழிவுக்கும் நட்டஈடு பெற்றுத்தர உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனப் பாதிக்கப்பட்ட வாழைத் தோட்டங்களின் உரிமையாளர்கள் வேண்டி நிற்கின்றார்கள். (ஒ-86)



புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரி இந்து மன்றத்தின் ஏற்பாட்டில் சிவதீட்சை வழங்கும் நிகழ்வு கல்லூரியில் உள்ள சோமாஸ்கந்தர் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்றது. அதில் சிவ தீட்சை பெற்ற மாணவர்கள், தீட்சை வழங்கிய கைலாசநாதக் குருக்கள் மற்றும் அதிபர், ஆசிரியர்கள் ஆகியோர்களைப் படத்தில் காணலாம்.

(படம்: கோப்பாய்ச் செய்தியாளர்)

# வீதி திருத்த பறித்த கற்களால் போக்குவரத்துக்கு இடையூறு

வலி.வடக்கு,நவ.25

கொக்குவில், சீனியர் லேனில் வீதி புனரமைக்கப் பறிக்கப்பட்ட கற்களினால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டுள்ளதாகப் பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக இவ்வீதியைத் திருத்துவதற்காகக் கற்கள் வீதியின் இரு மருங்கிலும் பரவலாகப் பறிக்கப் பட்டுள்ளன. இதுவரை இக்கற்கள் ஒழுங்குபடுத்தப்படவில்லை.

இப்போது கற்கள் நடுவீதிவரை பரவியுள்ளமையால் வாகனங்கள் செல்லமுடியாமலும் மற்றும் நடைபாதையாகக்கூடப் பொதுமக்கள் செல்லமுடியாமலும் உள்ளது.

இவ்வீதி மாணவர்கள் உட்படப் பலரும் பயன்படுத்தும் ஒரு வீதியாகும். குறிப்பாக வலி. தெற்கு, வலி.வடக்குப் பகுதி மக்கள்கூட யாழ்ப்பாண நகரப் பகுதிக்கு வந்து செல்லும் பாதை இது என்பது குறிப்பிடக்கூடியதாகும். (ஒ-86)




## அடைமழையால் பாதிப்படைந்த மக்களுக்கு உதவி

கடந்த சில நாள்களாகப் பெய்த அடைமழை காரணமாகப் பாதிப்படைந்த மக்களுக்கு யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினரால் உணவு, மருந்துப்பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் காலை யாழ். பல்கலைக்கழகப் பிரதிநிதிகள் வடமராட்சி கிழக்கு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிப்படைந்த பகுதிகளுக்குச் சென்று மக்களைச் சந்தித்து உதவிப் பொருள்களை வழங்கினர். மேலும் பாதிப்படைந்த மக்களின் தேவைகளைக் கேட்டறிந்துஅவற்றைத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஒ-14)

# ஈச்சமோட்டையில் குளங்கள் நிரம்பி குடியிருப்புகளுக்குள் நீர் புகுந்தது

அரியாலை,நவ.25

கடந்த இரு நாள்களுக்கு முன்னர் பெய்த கனத்த மழையினால் ஈச்சமோட்டைப் பகுதியில் உள்ள பால்குளம், முள்ளிக்குளம் ஆகியவை வெள்ளம் நிரம்பி வழிந்தோடுகின்றன. இதனால், இக்குளங்களைச் சூழ வசிக்கும் மக்கள் சிரமத்திற்கு இலக்காகியுள்ளனர்.

இந்த இரு குளங்களும் மக்களின் குடிமனைகளுக்கு நடுவில் அமைந்திருப்பதால் மழை காலங்களில் குளங்கள் நிரம்பி மக்களின் வீடுகளுக்குச் செல்வது வழக்கம்.

குளங்களில் இருந்து மேலதிக நீர் கடலுக்குச் செல்வதற்காக அமைக்கப்பட்ட வடிகால் வாய்க்கால் புனரமைப்புச் செய்யப்படாமையாலேயே இவ்வாறு மழை வெள்ளம் இந்தக் குளங்களில் நிரம்பி வழிவதாக இப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதேசமயம் இந்தக் குளங்களை அண்டியுள்ள வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகளை ஈச்சமோட்டை கிராம சேவையாளர் ம.சுந்தரலிங்கம் மேற்கொண்டு வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-17)

## இடம்பெயர்ந்தோருக்கு இடைக்காட்டில் மாதிரிக் கிராமம்

வலி.கிழக்கு,நவ.25

உயர் பாதுகாப்புப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து வலி. கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் 500 குடும்பங்களுக்கு 'ஐ.ஓ.எம்.' நிறுவனம் வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளதாக வலி.கிழக்குப் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்தார்.

இந்த 500 குடும்பங்களுக்கான வீட்டுத் திட்ட மாதிரிக் கிராமத்தை இடைக்காட்டில் நிறுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ஒ-180)

# சாவகச்சேரி மருத்துவ முகாமில் 200 பேருக்கு மேல் பங்கேற்பு

தென்மராட்சி,நவ.25

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை கச்சாயில் நடத்தப்பட்ட இலவச மருத்துவ பரிசோதனை முகாமில், 200இற்கும் மேற்பட்ட மக்கள் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடத்தப்பட்ட இந்த மருத்துவ முகாமில் கண், இரத்த அழுத்தம், நீரிழிவு, வாய்ப்புற்றுநோய், தொழு நோய், பெண் நோயியல், பொது மருத்துவம் ஆகிய பிரிவுகளில் பரிசோதனை நடத்தப்பட்டன.

கண் பரிசோதனையை யாழ். போதனா வைத்தியசாலை கண் சிகிச்சை நிபுணர் டாக்டர் குகதாஸன் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது. இப்பரிசோதனையில் கலந்துகொண்டோரில் 82 பேருக்குக் கண் பார்வையில் குறைபாடு இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

கண் பார்வையில் குறைபாடு காணப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் விரைவில் வழங்கப்படுமெனக் கழகத் தலைவர் லயன் சி.சிவபாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழக 306 பி-1 மாவட்டத் தலைவர் லயன் செ.கா.நவரத்தினமும் சிறப்பு விருந்தினராக கச்சாய் அ.த.க. பாடசாலை அதிபர் க.மங்களேஸ்வரனும் கலந்துகொண்டனர்.(ஒ-117)

# காலநிலையால் கடல் கலங்கியதில் பெரும் தொகை மீன்கள் பிடிபட்டன

வடமராட்சி,நவ.25

கடந்த சில தினங்களாக நிலவிய அசாதாரண காலநிலையினால் கடற்பிரதேசம் கொந்தளித்துக் கலங்கியதையடுத்து கடந்த செவ்வாய்க்கிழமை மாலையில் அதிக தொகையான மீன்களை மீனவர்கள் பிடித்தனர். இதனால் குடாநாட்டு மீன்சந்தைகளில் என்றுமில்லாத அளவுக்கு மீன்களின் விலை குறைந்திருந்தது.

ஓரா, அறக்குளா, ஒட்டி, சுறா, வாழை போன்ற மீன்வகைகள் தாராளமாகப் பிடிக்கப்பட்டு சந்தைகளில் விற்கப்பட்டுவருகின்றன.

யாழ். குடாக்கடல், பாக்குநீரிணைக் கடல், வங்காள விரிகுடாக் கடல் ஆகியவற்றில் மீன்கள் அதிகரித்துக் காணப்பட்டதாக வடமராட்சி வடக்குக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசச் செயலாளர் க.சூரியகுமாரன் தெரிவித்தார்.

இம்மீன் பெருக்கம் ஒருசில தினங்களில் முடிவடைந்துவிடும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-173)

## வீதியைத் திருத்த நடவடிக்கை

அரியாலை,நவ.25

நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாது குன்றும்குழியுமாகக் காணப்படும் நீர்வேலி தெற்கு, பூதர்மடம் வீதியைப் புனரமைப்பதற்கான நடவடிக்கையை வலி.கிழக்குப் பிரதேச சபை மேற்கொண்டு வருகின்றது.

இந்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு இப்பகுதி மக்கள் அண்மைக்காலமாக வலி.கிழக்குப் பிரதேசசபையிடம் கோரிக்கை விடுத்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-17)

## கூட்டுறவாளர் வீரசிங்கம் நினைவாக டிசெம்பர் 23இல் முத்திரை வெளியீடு

அரியாலை,நவ.25

கூட்டுறவாளர் அமரர் வீரசிங்கம் நினைவாக எதிர்வரும் டிசெம்பர் மாதம் 23ஆம் திகதி நினைவு முத்திரை வெளியிடப்படும் என்று முத்திரை வெளியீட்டு பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

அமரர் வீரசிங்கத்தின் 41 ஆவது நினைவு தினமான டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி நினைவு முத்திரையை வெளியிட்டு வைப்பதற்கான காலம் போதாமையினால் அதே மாதம் 23ஆம் திகதி நினைவு முத்திரை வெளியிட்டு வைக்கப்படும் என்று முத்திரை வெளியீட்டுப் பணிப்பாளர் நாயகம் யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபைக்கு அறிவித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை இந்த நினைவு முத்திரையை வீரசிங்கத்தின் 41ஆவது நினைவு தினமான டிசெம்பர் 5ஆம் திகதி வெளியிட்டு வைக்குமாறு முத்திரை வெளியீட்டுப் பணிப்பாளர் நாயகத்தைக் கோரியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-17)

# வடமராட்சியில் வெள்ளம் வடிகிறது

வடமராட்சி,நவ.25

கடந்த சில தினங்களாக நிலவிய அசாதாரண காலநிலை நேற்றுமுன்தினம் முதல் வழமைக்குத் திரும்பிக்கொண்டிருப்பதையடுத்து வடமராட்சி வடக்கு கரையோ...ப் பகுதிகளில் வெள்ளம் வடியத்தொடங்கியுள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தற்காலிக குடிசைகளில் வாழ்ந்துவரும் மீனவர்களின் குடியிருப்புகள் வெள்ளத்தில் மூழ்கியிருப்பதால்அவர்கள் தொடர்ந்தும் பாடசாலைகள் மற்றும் கோயில்களிலேயே தங்கியுள்ளனர். இருப்பினும், குடியிருப்புகளின் நிலைமைகளை அவர்கள் அவ்வப்போது சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

குடிசைகளைச் சூழவுள்ள பகுதிகளில் வெள்ளம் வடிந்ததும் இவர்கள் தமது இருப்பிடங்களுக்கு மீளவும் திரும்பவுள்ளனர். (ஒ-173)

# மட்டுவில் வடக்கு வயல்களில் மழையால் கடல்நீர் புகுந்துள்ளது

தென்மராட்சி,நவ.25

அண்மையில் பெய்த கடும்மழையினால் மட்டுவில் வடக்குப் பகுதி நெல் வயல்களில் கடல்நீர் புகுந்துள்ளது. இதனால், நூற்றுக்கு மேற்பட்ட ஏக்கரில் நெற்பயிர்கள் அழிந்தன.

மட்டுவில் வண்ணாத்திப்பாலத்திற்கும் கைதடி - கோப்பாய் பாலத்திற்குமிடையில் கடல் நீர் பெருகி மட்டுவில் பகுதி நெல் வயல்களில் பாய்ந்ததால் நெற்பயிர் அழிந்துள்ளதாக அப்பகுதி நெற்செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சாவகச்சேரி பெருங்குளம், கெருடாவில், அல்லாரை ஆகிய பகுதிகளில் மழை வெள்ளம் அதிகரித்ததால் நெல் வயல்களில் பயிர்கள் அழிந்துள்ளதாக அப்பகுதி நெற்செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

பெருங்குளத்திலிருந்து அல்லாரைக் குளத்திற்குச் செல்லும் வாய்க்கால் மிதிவெடி அபாயம் காரணமாகப் புனரமைக்கப்படவில்லை. இதனால் தூர்ந்துபோயுள்ள குளத்திலிருந்து நீர் பரவியோடியதால் நெற்பயிர்கள் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மழை பிந்தியதால் காலபோக நெற்செய்கை விதைப்பு தாமதமானதாகவும் திடீரெனப் பெரு வெள்ளம் ஏற்பட்டதால் பயிர்கள் அடித்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

# கோப்பாய் சுகாதாரப் பிரிவில் 150 பேருக்குப் புற்றுநோய் அறிகுறி

வலி.கிழக்கு,நவ.25

கோப்பாய் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பிரிவில் இடம்பெற்ற வாய்ப்புற்றுநோய் பரிசோதனையின்போது 150 பேருக்கு வாய்ப்புற்றுநோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரதேசத்தில் வசிக்கும் 50 வயதிற்கு மேற்பட்ட 3ஆயிரத்து 278 பேருக்கு இப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் 150 பேருக்கு வாய்ப்புற்றுநோய் இருப்பதற்கான அறிகுறியுள்ளதென்றும் -

யாழ். போதனாவைத்தியசாலையில் இவர்களுக்கான சிகிச்சையினைப் பெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் -

கோப்பாய் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வாய்ப்புற்றுநோய்ப் பரிசோதனைக்கு 13 ஆயிரத்து 610 பேரைத் தெரிவுசெய்து அழைத்தபோதும் அவர்களில் 3ஆயிரத்து 278பேரே பரிசோதனைக்கு வந்தனர். வாய்ப்புற்றுநோய்ப் பரிசோதனை மேற்கொள்ளாத மற்றவர்கள் இப்பிரிவில் உள்ள பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களுடன் தொடர்புகொள்ளலாம் - இவ்வாறு மேலும் அவர் கூறினார். (ஒ-180)



வதிரி பரமானந்தா ஆச்சிரமத்தைச் சேர்ந்த சிறுவர்கள் குடாநாட்டிலுள்ள பிரபல சைவ ஆலயங்களுக்குச் சுற்றுலா சென்ற பின்னர் எடுக்கப்பட்ட படம். சுற்றுலாக் குழுவினருடன் ஆச்சிரமப் பிரதிநிதிகளும் உள்ளனர். (ஐ-173)

## வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம் 2006 ஆம் ஆண்டுக்கான

### கேள்விப்பத்திரம்வழங்கும் கால எல்லை நீடித்தல்.

வல்வெட்டித்துறை மீன்சந்தை, தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம், தொண்டைமானாறு பேருந்து நிலைய சிற்றூண்டிச் சாலை ஆகியவற்றுக்கான கேள்விப்பத்திரம் வழங்கும் கால எல்லை கீழ் குறிப்பிட்டவாறு நீடிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பான மேலதிக விவரங்களை 05.11.2005 ஆம் திகதிய உதயன் பத்திரிகையின் விளம்பரத்திலும், எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்படிவம் வழங்குதல்: 02.12.2005 மு.ப10.00 மணிவரை
கேள்விப்படிவம் ஏற்றல்: 02.12.2005 நண்பகல் 12.00 மணிவரை
கேள்விப்படிவம் திறத்தல்: 02.12.2005 பி.ப 2.00 மணி

நா. தம்பிராசா,
செயலாளர்,
நகராட்சி மன்றம்,
வல்வெட்டித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை.
22.11.2005. (C/46345)(51-)

## குடிதண்ணீர் விநியோகம்

யாழ்ப்பாணம், நவ.25

மருதங்கேணிப் பிரதேசத்தின் தற்காலிக குடியிருப்பில் வாழும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுத்திகரிப்புச் செய்த குடிதண்ணீர் விநியோகத்தை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை மேற்கொண்டுள்ளது.

யாழ். மாவட்ட செயலகத்தின் ஒழுங்குபடுத்தலில் யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது.

இதேவேளை, கெயர், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஆகிய அரசசார்பற்ற நிறுவனங்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளை மேற்கொண்டுள்ளன.

வெள்ளத்தால் இடம்பெயர்ந்தவர்களுக்கு சமைத்த உணவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உலர் உணவுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

(ஓ-202 -203)

## *வீதி விபத்தில் மாணவர் காயம்*

தென்மராட்சி, நவ 25.

சைக்கிளில் சென்ற மாணவன் வாகனத்தினால் மோதுண்டு முட்கம்பிவேலி மீது வீழ்ந்ததில் கண்ணில் படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை நுணாவிலில் இடம்பெற்றது.

முட்கம்பி கண்ணில் குற்றி காயமடைந்த மாணவன் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

(ஓ-117)

## அறவழிக்குழு அலுவலகத்துக்கு புதிய கட்டடம்

தென்மராட்சி, நவ. 25

அறவழிபோராட்டக் குழுவின் தலைமை அலுவலகத்திற்கென புதிய கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இக்கட்டடத்தைநிர்மாணிப்பதற்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் 31 லட்சம்ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது.

கட்டடஅமைப்புக்கான அடிக்கல்லை கடந்த திங்கட்கிழமை சிறுவர் பாதுகாப்பு நிதிய நிறுவன முகாமையாளர் கே.மகேந்திரன் நட்டார்.

கைதடி நுணாவிலில் உள்ள அறவழி போராட்டக்குழு மண்டபத்தில் குழுத் தலைவர் டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சர்வதேச பயிற்சி மைய யாழ். மாவட்ட இணைப்பாளர் கே. தவரூபன், குழு இயக்குனர் வீ.ஜீ. தங்கவேல் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(ஓ-111)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

26.11.2005



கைதடி கிழக்கைச் சேர்ந்த ***விகர்ணன் – தனுசுஜா*** தம்பதியரின் செல்வப் புதல்வி ***விதுனா*** தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா மற்றும் சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், அத்தைமார், மச்சாள்மார், பூட்டன், பூட்டிமார் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் செல்வி விதுனாவை கைதடி விநாயகர் இறையருளுடன் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றார்கள்.

### செல்வி வி.விதுனா

கைதடி கிழக்கு,
கைதடி.

(43035)

தகவல்:
அருணாசலம் (அம்மப்பா)

## இரண்டாம் ஆண்டு நினைவுகளில்

சஞ்சலத்தில் நெஞ்சமெலாம்
சுரம் மாறி ஒலிக்குதிங்கு!
உன் பிரிவால் எம் உடல்கள்
உருக்குலைந்து போனதிங்கு

எண்ணங்கள் உருமாற
எம் உள்ளங்கள் சுரமாற
கண்ணீரும் கரைந்தோடி.

துன்பத்தின் தீச்சுடரில்
வெந்து நாம் இருக்கின்றோம்.
உன் ஆத்மா சாந்தி பெற
இறைவனை வேண்டுகின்றோம்.



### அமரர் இரத்தினேஸ்வரன் சுகுமார் (நிரஞ்சன்)

தோற்றம்:1978 - 06 - 29 மறைவு:2003 - 11 - 25

மண்டைதீவு,
8 ஆம் வட்டாரம்.

இரத்தினேஸ்வரன் (தந்தை)
கலைவாணி (தாய்)
நிமலன், சுடன், ராசன்(சகோதரர்கள்)
காஞ்சனா (மச்சாள்)
நிரஞ்சனா, நிரஞ்சன் ( சிறிய பிள்ளைகள்)

(43025)(51-)

## பாராட்டும் நன்றியும்

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் விசேட காப்புறுதிப் பயிற்சிக்காக பாங்கொக்கிற்கு அனுப்பப்பட்ட எமது முகவர்களான



திருமதி யோ.வாமதேவன் அவர்களையும்



திரு. க.சிவனேஸ்வரன் அவர்களையும்



திரு. சி.மதீஸ்வரன் B.A.(Hons) Dip. in Edu அவர்களையும்



அகில இலங்கைச் சமாதான நீதிவான் ஆக சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட

திரு. லயன் ப.தேவநாயகம் அவர்களையும்

பாராட்டி வாழ்த்துவதுடன் கடந்த இருபத்தைந்து வருடங்களாக காப்புறுதிச் சேவையிலும், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன அமைப்பாளருக்கான போட்டியில் பிராந்திய ரீதியாகவும், அகில இலங்கை ரீதியாகவும் முதலிடம் பெறுவதற்கு உறுதுணையாக இருந்த காப்புறுதிப் பத்திரதாரர்கள், முகவர்கள், பிராந்திய முகாமையாளர்கள், அலுவலக ஊழியர்கள் நலன் விரும்பிகள் ஆகியோருக்கும் எனது நன்றியைத் தெரிவிப்பதுடன், சகலருக்கும் எங்கும் அருள் சுரக்கும் எல்லாம் வல்ல நயினை நாகபூஷணியின் அருள் கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.


"காப்புறுதியின் முன்னோடிகளை நாடுங்கள்"
முன்னோடியின் பலம் முன்னரைவிட பலமானது.

"நயினைக்கதிர்" லயன் சி.ந. கதிர்வேலு J.P
"தேனாவளவு" அமைப்பாளர் (642)
கரவெட்டி மேற்கு, கரவெட்டி. இலங்கைக் காப்புறுதி.

(43082)(52-11-19)

## ஓராண்டு இதய அஞ்சலி

தோற்றம் 11 - 12 - 1921



மறைவு 26 - 11 - 2004

அமரர் வீ. சு. நடராசா
(இளைப்பாறிய உதவி ஆணையாளர் விற்பனைத் திணைக்களம்)

புவிதனிலே எம்மை
புன்னகை சிந்த வைத்து
புகழ் கொடுத்து சீர் தந்து
பூவுலகில் பேருடன் வாழவைத்து
புதுவுலகம் தேடிச் சென்ற
எம் தந்தையின் நீங்காத நினைவில் ........

கோகுலம்
ஆத்தியடி,
பருத்தித்துறை.

(43028)

மகள்
தேவகி அருமைச்சந்திரன்

# யாழ். தேர்தல் ஆட்சேபனை தொடர்பான அடிப்படை உரிமை மீறல் வழக்கு ஒத்திவைப்பு

கடந்த 2004 ஏப்ரலில் யாழ். மாவட்டத்தில் நடந்த பொதுத் தேர்தலின் போது தங்களது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டன எனத் தெரிவித்து சுயேச்சைக் குழு உறுப்பினர் வீ. ஆனந்தசங்கரி மற்றும் ஈ.பி.டி.பியைச் சேர்ந்த மூவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுக்களை உயர் நீதிமன்றம் அடுத்த வருடம் மார்ச் 17 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

நீதியரசர்கள் நிஹால் ஜயசிங்க, நிஸ்ஸங்க உடலகம, நிமால் திஸநாயக்க ஆகியோரைக் கொண்ட மன்றின்முன் இந்த மனு நேற்றுமுன் தினம் எடுக்கப்பட்டபோதே, இவ்வாறு அவை ஒத்தி வைக் கப்பட்டன.

இந்த மனுக்களில் எதிர் மனுதாரர்களாகத் தேர்தல் ஆணையாளர், யாழ். மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர், இராணுவத் தளபதி, பொலீஸ் மாஅதிபர் மற்றும் யாழ். மாவட்டத்தில் இருந்து நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த 8 உறுப்பினர்கள் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இந்த மனுக்கள் சார்பாக ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி கல்யாணந்த திரணகம மேற்படி மனுதாரர்களில் ஒருவர் கொலையுண்டுவிட்டார் என்றும், அவரது இடத்திற்கு வேறொரு மனுதாரரைச் சேர்க்க அனுமதிக்கும்படியும் நீதிமன்றத்தில் கோரினார்.

அடிப்படை உரிமை மீறல் மனுவில் ஒருவரின் அடிப்படை உரிமையை மீறியமைக்காக இன்னொருவர் விண்ணப்பிக்க முடியாது. ஆகவே, இந்த விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று எதிர் மனுதாரர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி சுமந்திரன் தெரிவித்தார்.

உயிரிழந்த மனுதாரரை எதிர் மனுதாரரின் ஆட்களே படுகொலை செய்தார்கள் என்று அப்போது நீதிமன்றத்தில் சட்டத்தரணி கல்யாணந்த திரணகம குறிப்பிட்டபோது அதனை சட்டத்தரணி சுமந்திரன் கடுமையாக ஆட்சேபித்தார்.

இவ்வாறு நடக்கின்ற கொலைகளை எல்லாம் புலிகள் மீது சுமத்திப் பொறுப்பைத் தட்டிக் கழித்துவிட பொறுப்பானவர்கள் முயல்கின்றார்கள் என்றும் சட்டத்தரணி சுமந்திரன் குறிப்பிட்டார்.

உயிரிழந்த மனுதாரருக்கா[illegible]ற்றொரு வரைச் சேர்க்கும் விண்ணப்பத்[illegible] நிராகரித்த நீதியரசர்கள் வழக்கை ஒத்திவைத்தனர்.

(க)

# சிறுபான்மை இனத்தவர்கள் அமைச்சு ஒதுக்கீட்டில் அதிருப்தி

கொழும்பு, நவ.25

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நேற்றுமுன்தினம் ஏற்படுத்தப்பட்ட அமைச்சரவையில் சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உரிய இடம் வழங்கப்படவில்லையென்று அமைச்சர்களாக சத்தியப்பிரமா ணம் செய்து கொண்ட சிலர் 'உதயன்'இற்குக் கருத்துத் தெரிவித்தனர்.

முன்னதாக கடந்த அமைச்சரவையில் அமைச்சர்களான ரிஷாட் பதியுதீன், நஜீப் ஏ. மஜீத், அமீர் அலி, அதாவுல்லாஹ், பேரியல் அஷ்ரப், டக்ளஸ் தேவானந்தா, அன்வர் இஸ்மாயில் போன்றோருக்கு முக்கிய பொறுப்புகள் வழங்கப்பட்டிருந்தன. அதன்மூலம் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அவர்களால் இயன்றளவு பணிகளை நேரடியாக ஆற்ற முடிந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

ஆனால், தற்போதைய அமைச்சரவை நியமனத்தையடுத்து இந்த நிலை முற்றுமுழுதாக மாற்றப்பட்டுள்ளது. மேற்படி உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட பதவிகளால் அவர்கள் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு நேரடியாக முழுமையான பணிகளை மேற்கொள்ள முடியாத நிலை உருவாகியிருப்பதாக பெயர் குறிப்பிடவிரும்பாத அமைச்சரொருவர் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைப் பதவிப் பிரமாண வைபவத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சேகு இஸ்ஸதீன், விஜயதாஸ ராஜபக்ஷ ஆகியோர் கலந்து கொள்ளவில்லை. முறையே தகவல் ஊடகம், வெளிவிவகாரம் ஆகியவற்றின் பிரதியமைச்சுப் பதவிகளுக்கு இவர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தபோதும் மேற்படி இருவரும் வைபவத்தை பகிஷ்கரித்தனர். அவர்கள் கோரிய அமைச்சுப் பொறுப்புகள் வழங்கப்படாத காரணத்தினால் இவ்வாறு நிகழ்வை அவர்கள் பகிஷ்கரித்தனர் எனத் தெரிய வந்தது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்காகப் பாடுபட்டு அவருக்குக் கூடுதல் வாக்குகளைப் பெற்றுக்கொடுத்தவர்களுக்கே அமைச்சரவை நியமனத்தின்போது முன்னுரிமையளிக்கப்பட்டதாக ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறின.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது தாம் எண்பது வீதம் சிங்கள, பௌத்தர்களின் உதவியுடனே ஜனாதிபதியாகத் தெரிவானார் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுமாறு மஹிந்த ராஜபக்ஷ, முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் பகிரங்கமாகவே கூறிவிட்டாரென்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(க)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான புதிய அமைச்சரவை நேற்றுமுன்தினம் புதன்கிழமை பதவியேற்றுக்கொண்டது. புதிய அமைச்சர்கள், புதிய அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்றுக்கொண்டனர். அவர்களின் விவரங்கள் வருமாறு:-

## அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள்

| | |
|---|---|
| ★ ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ | - நிதி மற்றும் பாதுகாப்பு. |
| ★ பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க | - இடர் முகாமைத்துவம். |
| ★ அநுரா பண்டாரநாயக்க | - சுற்றுலாத்துறை. |
| ★ டி.எம்.ஜயரட்ண | - தபால், தொலைத் தொடர்புகள் மற்றும் கிராமிய பொருளாதார மேம்பாடு. |
| ★ அமரசிறி தொடங்கொட | - நீதி சட்ட மறுசீரமைப்பு. |
| ★ நிமால் சிறிபால டி சில்வா | - சுகாதார மற்றும் போஷாக்கு. |
| ★ மங்கள சமரவீர | - வெளிவிவகாரம், சிவில் விமான சேவைகள், துறைமுகங்கள். |
| ★ ஏ.எச்.எம்.பௌசி | - ரயில்வே மற்றும் போக்குவரத்து, பெற்றோலியம், பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி. |
| ★ ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே | - வர்த்தக வாணிப பாவனையாளர் விவகாரம்,விற்பனை அபிவிருத்தி மற்றும் நெடுஞ்சாலைகள். |
| ★ மைத்திரிபால சிறிசேன | - விவசாய, சுற்றாடல், நீர்ப்பாசன மற்றும் மகாவலி அபிவிருத்தி. |
| ★ டபிள்யூ.டி.ஜே.செனவிரட்ன | - மின்சக்தி எரிபொருள்துறை. |
| ★ சுமேதா ஜீ.ஜயசேன | - சிறுவர் மேம்பாடு மற்றும் மகளிர் அபிவிருத்தி. |
| ★ சரத் அமுனுகம | - பொதுநிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள். |
| ★ அநுர பிரியதர்ஷன யாப்பா | - தகவல், ஊடகம். |
| ★ தினேஷ் குணவர்தன | - நகர அபிவிருத்தி மற்றும் நீர் வடிகாலமைப்பு. |
| ★ டக்ளஸ் தேவானந்தா | - சமூகசேவைகள் மற்றும் சமூகநலன்புரி. |
| ★ பேரியல் அஷ்ரப் | - வீடமைப்பு நிர்மாணத்துறை. |
| ★ சுசில் பிரேமஜயந்த | - கல்வி. |
| ★ அதாவுட செனவிரட்ன | - தொழில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு. |
| ★ எஸ்.பி.நாவின்ன | - கிராமியக் கைத்தொழில், சுயதொழில் மேம்பாடு. |
| ★ பியசேன கமகே | - வாழ்க்கைத்திறன், தொழில்பயிற்சி. |
| ★ ஜனக பண்டார தென்னக்கோன் | - மாகாணசபைகள், உள்ளூராட்சி. |
| ★ ஏ.எல்.எம்.அதாவுல்லாஹ் | - மீன்பிடி ,வீடமைப்பு அபிவிருத்தி. |
| ★ ரோஹித போகொல்லாகம | - கைத்தொழில் அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு. |
| ★ பேராசிரியர் திஸ்ஸ விதாரண | - விஞ்ஞானம், தொழில்நுட்பம். |
| ★ டியூ குண[illegible]சேகர | - அரசமைப்பு விவகார |

## அமைச்சரவை அந்தஸ்து அற்ற அமைச்சர்கள்

| | |
|---|---|
| ★ மில்ரோய் பெர்னாண்டோ | - பெருந்தோட்டக் கைத்தொழில். |
| ★ ஜீவன் குமாரதுங்க | - விளையாட்டு, இளைஞர் விவகாரம். |
| ★ பவித்ரா வன்னியாராச்சி | - சமுர்த்தி, வறுமை ஒழிப்பு. |
| ★ திஸ்ஸ கரல்லியத்த | - சுதேச மருத்துவம். |
| ★ பீலிக்ஸ் பெரேரா | - மீன்பிடி, நீரியல்வளம். |
| ★ சீ.பி.ரட்நாயக்க | - தோட்ட உட்கட்டமைப்பு, கால் நடை அபிவிருத்தி. |
| ★ சாலிந்த திஸாநாயக்க | - தெங்கு அபிவிருத்தி. |
| ★ மஹிந்த யாப்பா அபேவர்தன | - கலாசார மற்றும் தேசிய விழுமியங்கள். |
| ★ விஸ்வ வர்ணபால | - நாடாளுமன்ற விவகாரம். |
| ★ நஜீப் அப்துல் மஜீத் | - கூட்டுறவு, கூட்டுறவு அபிவிருத்தி. |
| ★ ரிசாத் பதியுதீன் | - மீள்குடியேற்றம். |
| ★ அமீர் அலி சிகாப்தீன் | - இடர் நிவாரண சேவைகள். |
| ★ சந்திரசிறி கஜதீர | - உள்நாட்டலுவல்கள். |
| ★ சமல் ராஜபக்ஷ | - விவசாய அபிவிருத்தி. |
| ★ குமர வெல்கம | - கைத்தொழில் அபிவிருத்தி. |
| ★ ரி.பி. ஏக்கநாயக்க | - வீதி அபிவிருத்தி. |
| ★ ரோஹித்த அபேகுணவர்த்தன | - வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாடு. |
| ★ அன்வர் இஸ்மாயில் | - நீர்ப்பாசனம். |
| ★ எஸ்.எல். சந்திரசேன | - கமநல சேவை மற்றும் விவசாயிகள் மேம்பாடு. |
| ★ பந்துல பஸ்நாயக்க | - தாவர மற்றும் விலங்கியல் பூங்கா மேம்பாடு. |
| ★ குணரத்ன வீரக்கோன் | - பிரதேச அபிவிருத்தி. |
| ★ ஸ்ரீபதி சூரியாராச்சி | - வாழ்க்கைத் திறன், தொழில்வாய்ப்பு. |
| ★ மஹிந்த அமரவீர | - புதிய ரயில்பாதை அபிவிருத்தி. |
| ★ ஜகத்புஸ்பகுமார | - கிராமிய வாழ்வாதார அபிவிருத்தி |
| ★ ஜயதிஸ்ஸரணவீர | - நெசவுக்கைத்தொழில் |

## பிரதி அமைச்சர்கள் விவரம்

| | |
|---|---|
| ★ மில்ரோய் பெர்னாண்டோ - | கிராமியப் பொருளாதார மேம்பாடு. |
| ★ திஸ்ஸ கரல்லியத்த - | சமய அலுவல்கள். |
| ★ சாலித்த திஸாநாயக்க - | விஞ்ஞான தொழில்நுட்பம். |
| ★ ஜகத் புஷ்பகுமார - | கைத்தொழில் அபிவிருத்தி, முதலீட்டு - ஊக்குவிப்பு, சமூக சேவைகள், சமுர்த்தி நலன்புரி. |
| ★ சேகு இஸ்ஸதீன் - | தகவல், ஊடகம். |
| ★ ஜயதிஸ்ஸ ரணவீர - | மகாவலி, சிறுவர் அபிவிருத்தி, மகளிர் மேம்பாடு. |
| ★ எம்.என்.அப்துல் மஜீத் - | மாகாண சபைகள், உள்ளூராட்சி. |
| ★ டிலான் பெரேரா - | நீதி, சட்ட மறுசீரமைப்பு, அரசமைப்பு விவகாரம், தேசிய ஒருமைப்பாடு. |
| ★ ரீ.பி. ஏக்கநாயக்க - | பொது நிர்வாகம். |
| ★ டி.எம். தசநாயக்க - | இனங்களைக் கட்டியெழுப்புதல் மற்றும் அபிவிருத்தி. |
| ★ மேர்வின் சில்வா - | தொழில். |
| ★ பண்டு பண்டாரநாயக்க - | சுற்றாடல், நீர்ப்பாசனம். |
| ★ மகிந்தானந்த அளுத்கமகே - | மின்சக்தி. |
| ★ மஹிந்த அமரவீர - | நகர அபிவிருத்தி, வடிகாலமைப்பு. |
| ★ ஜயரத்ன ஹேரத் - | சுகாதாரம், போஷாக்கு. |
| ★ [illegible]யாஸ்ரித்[illegible] திஸேரா - | நெடுஞ்சாலைகள். |
| ★ [illegible]மிந்த திஸநாயக்க - | சிவில், விமான சேவைகள். |
| ★ [illegible]ஜித் சியம்பலாபிட்டிய - | நிதித் திட்டமிடல், உயர்கல்வி. |
| [illegible]கித்த அபேகுணவர்தன - | தபால், தொலைத்தொடர்பு. |
| [illegible]ரமலால் ஜயசேகர - | கிராமியக் கைத்தொழில், சுயதொழில் மேம்பாடு. |
| [illegible]ர்தன வீரக்கோன் - | வீடமைப்பு நிர்மாணத்துறை. |
| [illegible]லசந்த அழகியவண்ண - | போக்குவரத்து. |
| ★ சிற[illegible] கம்லத் - | பாவனையாளர் விவகார, விவசாய விற்பனை அபிவிருத்தி. |
| [illegible]ராஹ[illegible]நாயக்க - | நிதித்திட்டமிடல். |
| ★ [illegible]ரணதுங்க - | சுற்றுலாத்துறை. |
| ★ [illegible]ஹுசைன் பைலா - | திட்டமிடல், திட்டமிடல் அமுலாக்கல் |
| ★ நிர[illegible] கொத்தலாவல - | கல்வி. |
| ★ எச்.ஆர். மித்ரபால - | வர்த்தக, வாணிபம். |
| ★ விஜயதாஸ ராஜபக்ஷ - | வெளிவிவகாரம். |

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி சந்திரகாந்தி அம்மா அவர்களின்
அன்புக் கணவர்

**பிலேந்திரராசா ஜெயராசா** (பொன்றாசா)

அவர்கள் 11.11.2005 வெள்ளிக்கிழமை இறைபதமெய்தியதையிட்டுத் துயருறுவதுடன், அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யா/கோண்டாவில் சி.சி.த.க.பாடசாலை.

அதிபர், ஆசிரியைகள்,
பாடசாலைச்சமூகம்.
(43156)(32-11-45-42)

## 31 ஆம் நாள் நீங்கா நினைவுகள்

எமது சபையின் சக ஊழியர்
**க.ரவீந்திரனின்** அன்புத் தந்தை
**அமரர் முருகேசு கனகரத்தினம்**
அவர்களின் மறைவினால் ஆழ்ந்த துயரடைந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச் சங்கம்**
**வலிகாமம் வடக்குப் பிரதேச சபை,**
காங்கேசன்துறை, மல்லாகம்.
(42967)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கடந்த 26-10-2005 அன்று
அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவி

### திருமதி இராஜேஸ்வரி ஜெகநாதன்

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு, நேரில் வந்தும் தொலைபேசி மூலமாக அனுதாபம் தெரிவித்தும் இறுதிச்சடங்கில் நேரில் கலந்து அஞ்சலி செலுத்தி ஒத்துழைப்பு வழங்கிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இன்று (25-11-2005) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். மேலும் அழைப்புக் கிடைக்கத் தவறியவர்கள் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

14, அம்மன் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
(சி-46352)(26-11-45-42)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## தையல் பயிற்சி

வலி.கிழக்கு, நவ.25

வலி.கிழக்கு பிரதேச செயலகத்தினால் நடத்தப்படவுள்ள நீர்வேலி தெற்கு, மேற்கு, வடக்கு பகுதிகளில் உள்ள யுவதிகளுக்கான தையல் டிப்ளோமா பயிற்சி நெறிக்கான நேர்முகப் பரீட்சை இன்று காலை 9 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலகத்தில் நடைபெறும் என கிராம அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர் தெரிவித்தார்.

இந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட 55 யுவதிகளுக்கும் கிராம உத்தியோகத்தர்கள் மூலம் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-180)

## அறிவூட்டல் செயலமர்வு

தென்மராட்சி,நவ.25

தென்மராட்சி கல்வி வலயப் பாட சாலைகளின் அதிபர்களுக்கான அறிவூட்டல் செயலமர்வு எதிர்வரும் 29ஆம் திகதி காலை 8.30 மணிக்கு வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

உளவியல் சமூக இடையீடு ஆலோசனை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இந்தச் செயலமர்வு நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (204-117)

## ஞானச்சுடர் வெளியீடு

வடமராட்சி,நவ.25

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான 'ஞானச்சுடர்' ஆன்மீக சஞ்சிகையின் கார்த்திகை மாத இதழின் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பேரவைத் தலைவர் க.அருள்லிங்கம் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சஞ்சிகையின் வெளியீட்டுரையை சிவ ஆறுமுகசாமியும், மதிப்பீட்டுரையை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி இந்து சமய ஆசிரியர் சிவஸ்ரீ தி.சோமஸ்கந்தராசக் குருக்களும் நிகழ்த்துவர். (ஒ-173)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,நவ.25

சமுர்த்தி நிவாரணம், உலர் உணவு நிவாரணம் என்பன தொடர்பாக விளக்கமளிக்கும் கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலர் உட்படப்பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ-203-202)

## சுனாமி பாதித்த வர்த்தகர்களுக்கு

யாழ்ப்பாணம்,நவ.25

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களின் சங்கம் தமது சங்கத்தில் இதுவரை பதிவுசெய்யாத வியாபார நிலையங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன் பதிவுசெய்யுமாறு கேட்டுள்ளது.

பருத்தித்துறை நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட பகுதியுடன் முதலாம் கட்டைச் சந்தியிலிருந்து நாவலடிச் சந்தி ஊடாக வியாபாரி மூலை - கடற்கரை வீதி முனை ஊடாக நெல்லண்டை வரையுள்ள எல்லைப் பரப்பில் வியாபார நிலையங்களை வைத்திருப்பவர்கள் தவறாது பதிவு செய்து கொள்ளுமாறும் -

மேற்படி எல்லைக் குட்பட்ட ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யுமாறும் -

சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (ஒ-202)

## யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில் அகில இலங்கையின் சாதனை மாணவியைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்




2005 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியில் கோட்ட, வலய, மாவட்ட, மாகாண மட்டங்களில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்ட செல்வி சோமசேகரம் திரியம்பகி அவர்கள் அண்மையில் நடைபெற்ற அகில இலங்கைத் தமிழ்த்தினப் போட்டியில் பிரிவு ஒன்று ஆக்க எழுத்துத்திறனில் முதலிடத்தைத் தட்டிக்கொண்டு, பாடசாலைக்குப் பெருமையைத் தேடித் தந்துள்ளார். இவர் 2004 ஆம் ஆண்டு பாவோதல் நிகழ்விலும் முன்னணி வகித்ததுடன் 2003ஆம் ஆண்டு சைவபரிபாலன சபையினர் சைவநெறித்தேர்விலும் தங்கப்பதக்கத்தைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இவரின் கல்விப்பாதையில் மேலும் பல வெற்றிகள் பெற்றிட வாழ்த்துகின்றோம்.

யாழ்.இந்து
ஆரம்ப பாடசாலை.
(C/46350)(42.11.45)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பா.அ.சங்கம்,ப.மா.சங்கம்.


## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரி ஆசிரியர் **திரு.S. சகாயராஜா**
அவர்களின் தாயார்
**அமரர் அனி சில்வெஸ்ரர்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் சங்கம்
**புனித பத்திரிசியார் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**
(43099)(42.11.45)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
08 - 02 - 1924



மறைவு
26 - 10 - 2005

### முருகேசு கனகரத்தினம்

(அண்ணையர்)

எம்மை வாழ்வாங்கு வாழ வைத்த
அன்புத் தெய்வமே!
உங்கள் நினைவுடனேயே நாம்.
உங்கள் ஆத்மா சாந்தியடையட்டும்

இன்று (25.11.2005) நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

முருகேச பண்டிதர் வீதி,
சுன்னாகம் தெற்கு.
(43097)(32-11-45-42)

- குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை கிருஷ்ணபிள்ளை

சுழிபுரம் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை கிருஷ்ணபிள்ளை அவர்கள் 22.11.2005 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் கனகம்மாவின் அன்புக் கணவரும் வள்ளியம்மை, நாகமுத்து, அமரர் மாசிலாமணி ஆகியோரின் சகோதரரும் அமரர் கந்தப்பு - வள்ளியம்மை தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்றவர்களான சண்முகம், கந்தசாமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சின்னத்துரை (குவைத்), சிவகுமார் (குவைத்), திருமதி நாகபூசணி, திருமதி கிருஸ்ணவேணி (முன்பள்ளி ஆசிரியர், பாரதி கலை மன்றம்), தவச்செல்வன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவபாலன், பரநிரூபசிங்கம், கிருஷ்ணவேணி, வதனி ஆகியோரின் அன்பு மாமனாரும் கௌரி, வாணி, சோபிதா, சுரேக்கா, சயந்தன், சிந்துஜா, கனலக்ஷனா, துவாரகன், சிந்துஜன், பிரணவி, பிரியங்கன், காயத்திரி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(25.11.2005) வெள்ளிக் கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று,பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.
(43160)(?-11-45-42)

தகவல்:
சின்னத்துரை (துரை),
சிவகுமார் (குட்டி)
மகன்மார்.

## ஊர்காவற்றுறை பிரதேச சபை மீன்சந்தை, மரக்கறிச்சந்தை, மாட்டிறைச்சிக்கடை என்பன குத்தகைக்கு வழங்குவதற்கான

# கேள்வி அறிவித்தல் - 2006

*ஊர்காவற்றுறை பிரதேசசபை எல்லைக்குள் இருக்கும் மீன்சந்தை, மரக்கறிச்சந்தை, இறைச்சிக்கடைகள் என்பவற்றை 01.01.2006 தொடக்கம் 31.12.2006 வரை குத்தகைக்கு வழங்கப்படவுள்ளது.*

*கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி 25.11.2005 தொடக்கம் 08.12.2005 வரை. கேள்விப்பத்திரம் 09.12.2005 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு, அன்றையதினமே பிற்பகல் 12.30 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும்.*

*மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் ஊர்காவற்றுறை பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

| இல. | குத்தகை விவரம் | மாதாந்த வாடகை | கேள்விப்பத்திரப் பணம் (மீளளிக்கப்படாதது) + வற்வரி | கேள்விப்பத்திரப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | ஆகக்குறைந்த கேள்வித் தொகை + வற்வரி |
|---|---|---|---|---|---|
| 01 | ஊர்காவற்றுறை பொதுச் சந்தை (மீன்சந்தை, மரக் கறிச் சந்தை, சைக்கிள் பாக்) | - | 500.00 | 100,000.00 | 200,000.00 |
| 02 | ஊர்காவற்றுறை மாட்டிறைச்சிக் கடை (இல.01) | 150.00 | 500.00 | 5,000.00 | 100,000.00 |
| 03 | ஊர்காவற்றுறை மாட்டிறைச்சிக்கடை (இல.02) | 150.00 | 500.00 | 5,000.00 | 100,000.00 |
| 04 | நாரந்தனை மீன்சந்தை | - | 500.00 | 1,250.00 | 25,000.00 |
| 05 | புளியங்கூடல் | - | 500.00 | 1,000.00 | 20,000.00 |
| 06 | நாரந்தனை மாட்டிறைச்சிக்கடை | 150.00 | 500.00 | 5,000.00 | 100,000.00 |
| 07 | காரைநகர் வேம்படி மீன் சந்தை | - | 500.00 | 2,000.00 | 40,000.00 |
| 08 | காரைநகர் வலந்தலை மீன்சந்தை | - | 500.00 | 2,500.00 | 50,000.00 |

ஊர்காவற்றுறை பிரதேசசபை,
ஊர்காவற்றுறை.
23.11.2005

**ஏ.கணேசானந்தராசா**
**செயலாளர்**
**ஊர்காவற்றுறை பிரதேசசபை.**
(சி/46356)(42-11-45-42)

# யாழ். பல்கலைக்கழக நடவடிக்கைகளும் உரிமைப் போரும் இணைந்துள்ளவையே


## மாவீரர் தூபி திறப்பு விழாவில் துணைவேந்தர் உரை

யாழ்ப்பாணம், நவ.25

யாழ். பல்கலைக்கழகத்தின் நடவடிக்கைகளும் உரிமைப் போராட்டமும் ஒன்றுடன் ஒன்று இணைந்தவை.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர் சு.மோகனதாஸ்.

நேற்று யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மாவீரர் நினைவுத் தூபியின் திறப்பு விழாவில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.



யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் மாவீரர் நினைவுத் தூபி நேற்றுத் திறந்துவைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நினைவுத் தூபிக்கு மாணவர் ஒன்றிய முன்னாள் தலைவர் எஸ்.செல்வகுமார் மாலை அணிவிப்பதையும் பொதுச்சுடரை மருத்துவ பீடாதிபதி எஸ்.சிவபாலன் ஏற்றுவதையும் தமிழீழ தேசியக்கொடியை மாணவர் ஒன்றிய முன்னாள் செயலாளர் எஸ்.சிவ கரன் ஏற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட ஆசிரிய சமூகத்னர், மாணவ, மாணவியர் ஆகியோரைப் படங்களில் காணலாம்.

(படங்கள்: பிரபா)

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

இந்த நினைவுத் தூபி மாவீரர் தினத்தில், பொருத்தமான இடத்தில் பொருத்தமானவர்களால் இன்று திறந்துவைக்கப் பட்டுள்ளது.

இது காலத்தின் தேவையாக அமைகின்றது. இன்று எமது உரிமைப் போராட்டத்தைப் பார்த்தால் அது பல வடிவங் களை எடுத்துள்ளது. இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றம், உலகத் திலே ஏற்படுகின்ற அரசியல் மாற்றங்கள் என்பவற்றை உன்னிப்பாகக் கவனிக்கும்போது தமிழரின் உரிமைப் போராட்டத்தை எமது கையிலேயே எடுத்துக் கொள்ளவேண்டும்.

எமது உரிமைப் போராட்டத்தின் வளர்ச்சியும் எமது பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியும் ஒன்றுடன்ஒன்று பின்னிப்பிணைந்ததாக இருக்கின்றது. அந்த வளர்ச்சியில் ஒரு மைல் கல்லாக இந்த நினைவுத் தூபித் திறப்பு அமைகின்றது.

இந்த நினைவுத் தூபிக்கு உரித் தான வர்கள் எமது மாவீரர்கள்.

அதி உன்னதமான ஒரு தியாகத்தைச் செய்து - அந்தத் தியாகத்தின் மூலம் தமது குறிக்கோளை அடைவதற்கும், தமக்கு எதிரியாக இருப்பவர்களை இனம்கண்டு அந்த எதிரியைத் தாக்க தமது உயிரை ஆகுதியாக்கியவர்கள்.

அந்த உயிரை விதைத்து அதன்மூலம் மேலும் பலர் பிறந்து உரிமைப் போராட்டத்தை வழிநடத்திக் கொண்டு செல்கின்றவேளையிலே தமிழராகிய நாங்கள் மாவீரர்களின் பாதார விந்தங்களை வணங்கவேண்டும்.

பாதார விந்தங்களை வணங்குவது எமது பாரம்பரிய வழக்கம். தமது உடலை ஆகுதியாக்கிய வீரருடைய பாதத்தை இன்று இந்த நினைவாலயத்திலே பொறித்து அந்தப் பாதத்திற்கு மலர்தூவி எமது பாரம்பரியத்தில் அவர்களைத் தெய்வமாகப் பூசிக்கின்ற நாளாக - பல்கலைக்கழகத்தில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நாளாக - இன்றையதினம் திகழ்கின்றது.

எமது பல்கலைக்கழகமும் கற்பித்தல் கற்றல் நடவடிக்கைகளும் ஆராய்ச்சி நடவடிக்கைகளும் சமூகத்துடன் இணைந்த செயற்பாடுகளும் எமது உரிமைப் போராட்டமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்து நாமும் எமது சமூகமும் இந்தப் பல்கலைக்கழகம் ஸ்தாபித்ததன் உன்னத நோக்கத்தை அடைந்து கொண்டிருக்கின்றோம்.

இந்த நல்லதோர் கைங்கரியத்தை முன்னின்று ஆற்றிய மாணவர்கள், மாணவத் தலைவர்கள், பெற்றோர்கள் ஆகியோரைப் பாராட்டுகின்றோம்.

எல்லோரும் ஒன்றிணைந்து எமது உரிமைப் போராட்டத்தின் வெற்றியைக் காணும்போது மாவீரர்களின் இந்த நினைவாலயம் ஒரு தெய்வாலயமாக மாறும். (ஒ-7-202-86)

---

## ஈச்சங்குளம் துயிலுமில்லத்தில் மேலும் மூன்று நினைவுக் கற்கள்

வவுனியா,நவ.25

வவுனியா ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர்கள் மூவரின் நினைவுக் கற்கள் நேற்றுமுன்தினம் ஸ்தாபிக்கப்பட்டன.

''ஜயசிக்குறு'' இராணுவ நடவடிக்கையின்போது வீரச்சாவடைந்த சகோதரர்களான மதிவாணன் என்று அழைக்கப்படும் மாயழகு சிவாநந்தன் மற்றும் ஆரூன் என்று அழைக்கப்படும் மாயழகு பரமானந்தம் மற்றும் மணற்செல்வன் என்று அழைக்கப்படும் தொப்பிளான், திருச்செல்வம் ஆகியோரின் நினைவுக் கற்களே ஸ்தாபிக்கப்பட்டன. இந்த நிகழ்வு ஆசிரியர் ஜெயச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதில் வன்னி மாவட்ட அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் ஏ.கே.செந்தில்நாதன் மற்றும் மாவீரர்களின் பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். இதே வேளை, மாவீரர் தினத்திற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டு இருப்பதாகவும் இந்த நிகழ்வு வவுனியா ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெற இருப்பதாகவும் வவுனியா மாவட்ட அரசியல் துறையினர் தெரிவித்துள்ளனர். (ஒ-164)

## மாவீரர்தின போட்டி முடிவுகள்

கிளிநொச்சி,நவ.25

மாவீரர் தினத்தை முன்னிட்டு தமிழீழ நுண்கலைக் கல்லூரியால் நடத்தப்பட்ட வில்லிசை, நாட்டிய நாடகப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறையின் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் இப்போட்டிகள் நடத்தப்பட்டன.

போட்டிகளில் வெற்றிபெற்ற பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

**வில்லிசை**

கனகபுரம் மகா வித்தியாலயம், கண்டாவளை மகா வித்தியாலயம், கிளிநொச்சி மத்திய கல்லூரி.

**நாட்டிய நாடகம்**

கிளிநொச்சி மத்திய கல்லூரி, கண்டாவளை மகா வித்தியாலயம், புனித திரேசாள் பெண்கள் கல்லூரி.

வெற்றியாளர்களுக்கான சான்றிதழ்களும் பணப்பரிசும் நாளை சனிக்கிழமை ஆனையிறவில் நடைபெறவுள்ள நிகழ்வில் வைத்து வழங்கப்படவுள்ளன.

முதலாம் இடத்தைப் பெற்ற நிகழ்வுகள் நாளைய நிகழ்வில் காட்சிப்படுத்தப்படவுள்ளன. (ஒ-202)

## மாவீரர் எழுச்சிவார நிகழ்வுகள்

புளியங்குளம்,நவ.25

மாவீரர் தினத்தை முன்னிட்டு மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கனகராயன்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆவர்த்தனா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரை வவுனியா அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானமும் தேசியக் கொடியை குட்டிசிறி மோட்டார் சிறப்புப் படையணியைச் சேர்ந்த கோபாலும் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து சிறப்புரைகளை குட்டிசிறி மோட்டார் படையணியைச் சேர்ந்த பேரின், கடற்படைச் சிறப்புத் தளபதி சூசை, தூயவன் அரசறிவியல் கல்லூரிப் பொறுப்பாளர் அரசண்ணா ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோருக்குத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன.

வவுனியா மாவட்டப் பொறுப்பாளர் ஞானம் மற்றும் போராளிகள், மாவீரர்களின் பெற்றோர்கள் எனப் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஒ-355-203)

*** *** ***

ஒட்டுசுட்டான்,நவ.25

மாவீரர் தினத்தையொட்டி வவுனியா செட்டிக் குளம், புதுக்குளம் பகுதியில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோதரலிங்கம், தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் எஸ்.என்.சி.நாதன் ஆகியோர் உட்படப் பலரும் நிகழ்வில் பங்கேற்றனர்.

முன்னதாக புதுக்குளம் சிவன் ஆலயத்திலிருந்து மாவீரர்களின் பெற்றோர் ஊர்வலமாகப் புதுக்குளம் மகாவித்தியாலயத்துக்கு அழைத்துச்செல்லப்பட்டனர். அங்கு கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. (ஒ-341)

**வன்னிச் செய்திகள்** கிளிநொச்சி முல்

## மருத்துவர் சங்கப் புதிய நிர்வாகிகள்

வட்டக்கச்சி,நவ.25

கிளிநொச்சி மாவட்ட மருத்துவர் சங்கத்தின் புதிய நிர்வாகக் குழு தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை பிற்பகல் 7 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை வைத்தியர் விடுதியில் நடைபெற்ற சங்கத்தின் பொதுக்கூட்டத்திலேயே இப்புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டது.

முன்னாள் மருத்துவர் சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி பி.பிறைற்றன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஆண்டறிக்கை, கணக்கறிக்கை என்பன சமர்ப்பிக்கப்பட்ட பின் புதிய நிர்வாகக் குழு தெரிவு செய்யப்பட்டது.

புதிய நிர்வாகக் குழுவின் தலைவராக வைத்திய கலாநிதி இ.சதானந்தனும், செயலாளராக வைத்தியக்கலாநிதி எஸ்.ஜீவாவும், பொருளாளராக வைத்தியக் கலாநிதி மா. குகராசாவும் தெரிவுசெய்யப்பட்டனர். இவர்கள் உட்பட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் பதினாறு பேரும் இக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டனர். (ஒ-450)

## நடமாடும் மருத்துவ சேவை

கிளிநொச்சி,நவ.25

கிளிநொச்சி மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம் நடமாடும் மருத்துவ சேவையை நடத்தி வருகின்றது.

வெளிக்கள வைத்தியர்களின் உதவியோடு இடம்பெயர்ந்த மக்களின் வாழ்விடங்களில் இந்த நடமாடும் சேவை நடத்தப்படுகின்றது.

பாரதிபுரம் பாடசாலை, திருமுறிகண்டி பாடசாலை, பரந்தன் காஞ்சிபுரம், கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி ஆகிய இடங்களில் 520 நோயாளர்களுக்குச் சிகிச்சை வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மக்கள் கொதித்தாறிய நீரைப் பருகி, ஈமொய்க்காத உணவுகளை உண்டு, பாதுகாப்பாக மனித கழிவு அகற்றலைச் செய்யுமாறு நிறுவனம் பொதுமக்களைக் கேட்டுள்ளது. (ஒ-202)

## நடமாடும் காணிப் பதிவக சேவை

வட்டக்கச்சி,நவ.25

கிளிநொச்சியில் உள்ள கண்டாவளை உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட இரட்டைப்பனைக்குளம், பிள்ளையார் குளம் ஆகிய கிராமங்களின் மக்களுக்கான நடமாடும் காணிப் பதிவக சேவை கடந்த 14ஆம் திகதி கட்டைக்காடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்றது.

இதில் இந்த இரு கிராமங்களையும் சேர்ந்த மக்கள் தமது காணிகள் தொடர்பான பதிவுகளை மேற்கொண்டதுடன், காணி தொடர்பான பிரச்சினைகள் பற்றியும் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடினார். (ஒ-405)

## அடிப்படை வசதிகள் இன்றி பாப்பாமோட்டை மக்கள் அவதி

ஒட்டுசுட்டான்,நவ.25

மன்னார், பாப்பாமோட்டைக் கிராமத்தில் அடிப்படை வசதிகள் இல்லாமையால் கிராமமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இக்கிராமத்தில் சுமார் 275 குடும்பங்கள் வசித்துவருகின்றனர். இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து மீளக்குடியேறியுள்ள பல குடும்பங்கள் தற்காலிகக் குடியிருப்புகளிலேயே வசித்துவருகின்றன. அடிப்படை வசதிகளும் இல்லாமையால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (த-341-202)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ஒக்ஸ்போட் கார் விற்பனைக்குண்டு. T.P. 0779688473 என்ற இலக்கத்திற்கு உடன் தொடர்புகொள்ளவும். (43089)

பருத்தித்துறை நகரில் கேபிள் லைன் தொலைபேசி விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 0776102941. (சி-46362)

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நல்லூர் கோயில் வீதிக்கு அருகிலும் சென்ஜோன்ஸ் கல்லூரிக்கும் வேம்படி மகளிர் கல்லூரிக்கும் ½km இடைத் தூரத்தில் அமைந்துள்ள 1½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: 0776943532 (43088)

### வீடு விற்பனைக்கு

அச்சுவேலி ஜோன் ராஜ வீதியில் நான்கு பரப்புடன் கூடிய வீடு உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இல. 0773028402, 011-2360963. (சி-46359)

### பணிப்பெண் தேவை

சண்டிலிப்பாய் டச்றோட்டில் சீரணிச் சந்திக்கு சமீபமாக வசிக்கும் குருகுடும்பஸ்தருக்கு பணிப்பெண் வீட்டிலிருந்து உதவ வேண்டும். தகுந்த சம்பளம் வழங்கப்படும். தொடர்புகொள்ள P.S மணி. (43085)

### மணமக்கள் தேவை

யாழ். உயர்குல கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்த, 1959 ELECT ENG இற்கும், 1955 தாரம் இழந்த கம்பனி உரிமையாளர் ஆகிய இருவருக்கும் (கனடா PR உள்ளவர்கள்) தாயார் படித்த, அழகுள்ள மணமகள்களை எதிர்பார்க்கின்றார். உயரம் 5'11", 5'9" தொடர்பு: ஸ்ரீ ராகவேந்திரா ஜோதிடம் 159A, கோயில் வீதி, நல்லூர். T.P.No. 021-222 9295. (43093)

### சேவை

55000 அமெரிக்க விசா விண்ணப்ப முடிவு திகதி 04-12-2005. தாமதிக்காமல் விண்ணப்பிக்க. முழுப்பெயர், விலாசம், பிறந்த திகதி, பாஸ்போட் அளவு போட்டோவுடன் ரூபா 400/- இற்கான மணி யோடரை அனுப்புங்கள். குடும்பமாயின் மனைவி, பிள்ளைகளின் தனிப்போட்டோக்கள், பெயர், பிறந்த திகதிகளையும் அனுப்பவும். Penquin Book Shop, $B_2/F_{23}$ Blomendhal Flats, Kotahena. 0773081764 (சி/46306)

### பூச்சாடிப் பிரியர்களுக்கு

றபர் துகள்களால் தயாரிக்கப்பட்ட சிறிய, பெரிய கலர்ப் பூச்சாடிகள் விற்பனைக்கு உண்டு. வீட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் இலகுவில் இடம்மாற்றி வைக்கக்கூடியது. தொடர்பு: நெட்டிலிப்பாய், கோண்டாவில். (DSI ரயர் களஞ்சியத்திற்கு அருகில்) (46278)

### தவறிவிட்டது

S.மரியதாஸ் என்பவருடைய மோட்டார் சைக்கிள் காப்புறுதிப் பத்திரம் 2005, மோட்டார் வரிச்சான்றிதழ் 2005, மோட்டார் சைக்கிள் பதிவுப் பற்றுச்சீட்டு என்பன 17.11.2005 அன்று யாழ்.பிரதான வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். T.P.No. 0712502106. (43087)

## போர்ப் பாதிப்பு தொடர்பாக தகவல் சேகரிப்பு

வலி.கிழக்கு, நவ.25

போரினால் காணாமற்போன அல்லது கடும் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு நஷ்டஈடு கொடுப்பனவை வழங்க அதற்கான தரவுகளை அனுப்பி வைக்கும்படி யாழ். மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் சகல பிரதேச செயலகங்களுக்கும் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

போரினால் காணாமற் போனவர்கள், கடும் பாதிப்புக்குள்ளானவர்களை இனம் கண்டு கிராம சேவையாளர்கள் மூலம் தரவுகளை உடன் அனுப்பி வைக்குமாறு சகல பிரதேச செயலர்களையும் அவர் கேட்டுள்ளார்.

(ஒ-180)

### மருந்து விற்பனையாளர் தேவை

நெல்லியடியில் இயங்கும் மருந்தகத்திற்கு மருந்து விற்பனை செய்யக் கூடிய ஒருவர் தேவை.

தொடர்பு: 0779180416

(43163) (21.19.17)


UNIT

3 வருட முழு உத்தரவாதம்

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு கணினியுடனும்

Free UPS, Screen Filter, Dust cover, Mouse Pad.

HURRY!! Only For Limited Days

All Based on Colombo Price

நாங்கள் கணினியை மாத்திரம் வழங்கவில்லை. அவற்றை மெருகூட்டி வழங்குகிறோம். எங்கள் அனுபவப் பயிற்சியினை மூலமாக

347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna.
T.P: 021- 4590720 / 0773134737


## நீங்காத... நினைவலைகள்



### முத்துக்கிருஷ்ணர் குணாளன்

(புளியங்கூடல்)

வீரவேங்கை ஆனந்தன்

ஈழமண்ணுக்காய் 05 - 08 - 1973 | ஈழத்தில் விதையாய் 31-08-1990

எம் அன்பான கண்மணியே!
எம தருமைக் குணாளனே!
உன் தீராக் கனவு நிறைவேறும்
நாள் மிக அருகிலடா
தமிழீழம் எங்கும் சங்கொலி
முழங்கும் நாளில் நீ
எம் அருகில் இருக்க நாம்
கொடுத்து வைக்காத பாவிகளடா!
நீ எம்மை விட்டுப் பிரிந்து ஈழத்திற்காய்
வித்தாகி ஆண்டோ பதினைந்து -ஆனாலும்
ஆறாதடா எம் துயர் ஆண்டாண்டு காலமும்
இம் மாவீரர் நாளிலும் உன் நினைவுகளுடன்...

விளம்பர அனுசரணை:- ரகுப்பிரியா அட்வடைசிங் சேர்விஸ்

(43164) (26-19-17)

இங்கிருக்கும் - மைத்துனர், கனி கிறீம் ஹவுஸ், திருநெல்வேலி.




ஸ்ரீ விநாயகர் ஜோதிடம

வம்சாவளியாக அம்பாளின் அருள்கொண்டு இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள

வி.நாகராஜ சுவாமிகள் அவர்கள்

இவர் ஜாதகம், கைரேகை மூலமாகத் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை மற்றும் வியாபார லட்சுமிகர விடயமான பொருத்தம், குடும்பப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கிறார். வெளிநாட்டுப் பயணம் மற்றும் எதிர்காலப் பலன்களை அறிவதற்கும் நாடுங்கள்.

✱ எந்தவிதமான பிரச்சினைகள் இருந்தாலும் சுவாமிகளைச் சந்திக்கலாம்.

பிள்ளையார் இன்

(42993)

அறை எண் 5, 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 077 9582596.


## 6 ஆம் மாத நினைவஞ்சலி

பிறப்பு 16 - 03 - 1938



இறப்பு 25 - 05 - 2005

### திருமதி லில்லி நேசமலர் தேவராஜா

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

மலரின் பெயரில் மலர்ந்து
கடவுளின் ஆசியில் வளர்ந்து
பாசத்தின் பிறப்பிடமாய் வாழ்ந்து
ஆசையுடன் எம்மை பெற்றெடுத்து
எமக்கென்று வாழ்ந்து
எம்மை வளர்த்த அம்மாவே!
நீங்கள் எம்மை விட்டுச் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எப்போதும்
எம்மை விட்டு அகலாது.

நவாலி றோட்,
குளத்தடி சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

- குடும்பத்தினர்.

(43162)(21.19.17)


US GREEN CARD

அமெரிக்க விசா

இது உங்கள் சந்தர்ப்பம் The Last Chance

America Forever

வயது, கல்வி தகுதி வேறுபாடு இல்லை. யாரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பம் ரூபா 5/- மட்டும்

உங்கள் அருகில் நாங்கள்....இது அதிஸ்டமல்ல. சந்தர்ப்பம். உங்கள் முயற்சி உங்கள் வாழ்வை மாற்றும்.
விண்ணப்பத்தினை பூர்த்திசெய்து ஒரு புகைப்படத்துடன் அனுப்பினால் போதும். மேலதிகவிபரம் விண்ணப்பத்தில்

கீழுள்ள இடங்களில் விண்ணப்பங்கள் கிடைக்கும்.

**நீர்வேலி**
PRS தொலைத் தொடர்பகம்
சடாஸ் மஹால்

**புத்தூர்**
ஜெனீவா தொலைத் தொடர்பகம்.
செல்வா சைக்கிள் ஹாட்வேக்ஸ்

**அச்சுவெலி**
வலி கிழக்கு வடபகுதி -
- பலநோக்குகூட்டுறவுச்சங்கம்
சியான் றேடர்ஸ்

**அரியாலை**
மதுசா களஞ்சியம்

**கைதடி**
விது பல்பொருள் வாணிபம்
சாரி பார்த் மிக்ஷர்

**சாவகச்சேரி**
கோபி தொலைத்தொடர்பு நிலையம்
ஸ்ரீ கோணேஸ்வரா புத்தகசாலை
தர்சன் தொலைத்தொடர்பு நிலையம்

**மீசாலை**
கஜானன் பன்முக சேவை
கபிஷன் எலக்றிக்கல்ஸ்

**கொடிகாமம்**
அருள் நாயகி புத்தக சாலை

**வரணி**
M.S.K

**பருத்தித்துறை**
நிதேஷ் என்ரபிரைசசஸ்

**நாச்சிமார் கோவிலடி**
லிங்கமஸ்ரோர்

**யாழ்ப்பாணம்**
ஸ்ரீலங்கா புக் டிபொட் (கே.கே.எஸ் வீதி)
மக்மிலன் புக் டிப்பொற் (பஸ் ஸ்ராண்ட்)

**ஓட்டுமடம்**
சித்தி விநாயகர் அழகுச் சோலை
ஜெனு தொலைத்தொடர்பு நிலையம்
சஜி வீடியோ விஷன்

**தட்டாதெரு சந்தி**
மருதா பொலிமர் சீல்

**யாழ்ப்பாணம் (பலாலி வீதி)**
பாலவிநாயகர் பான்சி ஸ்பொட்
அன் வீடியோ விஷன்

**ஆலடிச் சந்தி**
கணன் சூஸ்

**கோண்டாவில்**
ஆந்ரா டிஜிற்றல் இமேஜ்
(கே.கே.எஸ் வீதி)
பிள்ளையார் எலக்றிக்கல்
(பலாலி வீதி)

**உரும்பிராய்**
சிவசக்தி ஸ்ரோர்ஸ்

**ஆறுகால் மடம்**
சக்தி தொலைத்தொடர்பு நிலையம்

**மானிப்பாய்**
செந்தூரன் பான்சி ஹவுஸ்
தர்மரூபன் பல்பொருள் வாணிபம்
காவேரி பான்சி

**பரமேஸ்வராச் சந்தி**
புக் லாப் (Book Lab)
சிவன் ஸ்ரோர்ஸ்

**அளவெட்டி**
கஜமுகன் மல்ரி ரேட்ஸ் சென்ரர்

**ஆனைக்கோட்டை**
சிவா மல்ரி சென்ரர்
ஜனனி அழகு மாடம்

**சங்கானை**
சங்கானை பார்மசி
நகுலன் ஸ்ரோர்ஸ்
அன்னம்ஸ் புக் சென்ரர்
பிரதீப் தொலைத் தொடர்பகம்

**மீசாலை**
கஜானன் பன் முக சேவை

**மல்லாகம்**
ஆதவன் ரேட் சென்ரர்
சுப மங்களா அழகு மாடம்

**இணுவில்**
நியூஸ் பேப்பர் ஏஜென்ர்

**கொக்குவில்**
சண்முகன் சேல்ஸ் சென்ர்
சுதா தொலைத் தொடர்பு அகம்

**புலொலி (மந்திகை)**
சிவசக்தி பல்பொருள் வாணிபம்

**மாசியப்பிட்டி**
சிவானுயா கூல்பார் அன்
கம்மியுனிகேசன்

**சண்டிலிப்பாய்**
சிறி வைரவர் காட்வெயார்ஸ்

**நெல்லியடி**
The Phone Shop

**சுன்னாகம்**
துர்க்கா புத்தக சாலை

**கந்தர்மடம்**
திவ்யா பல்பொருள் வாணிபம்

**திருநெல்வேலி**
கனகா பத்திரிகை விற்பனையகம்

**கல்வியங்காடு**
அனு களஞ்சியம்
வதனா புத்தக சாலை
துர்க்கா பான்சி ஹவுஸ்.

**இருபாலை**
லக்கி பான்சி ஹவுஸ்

**கோப்பாய்**
சேல்வதிருமகள் பான்சி ஹவுஸ்

**புன்னாலைக் கட்டுவன்**
கலைமதி புத்தக சாலை

விண்ணப்பிக்கும் அனைவருக்கும் 60 அலகுகள் கொண்ட ஆங்கில தொலைக்கல்வி பாடநெறி இலவசம்
இச்சலுகை வரும் 27.11.2005 வரை விண்ணப்பிப்பவர்களுக்கே

விண்ணப்பங்களை நேரடியாக ஒப்படைக்கலாம். அல்லது தபால் மூலமாக அனுப்பலாம்.

SAAMSTECH

841, Hospital Road, Jaffna. 4591571
233/4, Kasthuriar Rd, Jaffna 2229505

# ஈராக் தலைநகரில் கார்க்குண்டுத் தாக்கு; 35 பேர் உயிரிழப்பு; 50 பேர் படுகாயம்!

பாக்தாத், நவ.25

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் அமெரிக்கப் படைகளின் கவச வாகனத் தொடர் அணி நிறுத்தப்பட்டிருந்த வலயத்துக்குள் நேற்று இடம்பெற்ற தற்கொலைக் கார்க் குண்டுத் தாக்குதலில் குறைந்தது 35 பேர் உயிரிழந்தனர். மேலும் 50 பேர் படுகாயம் அடைந்தனர்.

குண்டுத் தாக்குதலையடுத்து அந்தப் பகுதி முழுமையாக அமெரிக்கப் படைகளால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. பல முக்கியமான வீதிகளும் மூடப்பட்டிருந்தன.

பாக்தாத்தின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள முக்கிய நகரமான மஹ்முதியாவில் தற்கொலைக் கார்க்குண்டுதாரி அமெரிக்கப் படையினரின் பாதுகாப்பு வலயத்தை உடைத்துக்கொண்டு சென்று குண்டை வெடிக்க வைத்தார். இதனால் அந்தப் பகுதி அதிர்ந்ததுடன், புகை மண்டலமாகவும் காட்சியளித்தது.

இந்தக் குண்டுத் தாக்குதலில் குறைந்தது 35 பேர் உயிரிழந்தனர். மேலும் 50 பேர்வரை படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்கள் உடனடியாக நகரின் முக்கிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

அமெரிக்கப் படைகள் மற்றும் பொதுமக்களை இலக்கு வைத்து தீவிரவாதிகள் தொடர்ச்சியான தற்கொலைத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். கடந்த ஒரு வாரத்தில் மட்டும் இவ்வாறான தாக்குதல்களில் 200 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். அடுத்த மாதம் டிசம்பர் 15ஆம் திகதி ஈராக்கில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் வன்முறைகள் அதிகம் தலை தூக்கியுள்ளமை குறித்து ஈராக் அதிகாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.



பாக்தாத்தில் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அமெரிக்க விமானப் படையினர்

## பங்களாதேஷில் வன்முறை

டாக்கா,நவ.25

பங்களாதேஷில் அரசுக்கு எதிராக அந்த நாட்டு எதிர்க்கட்சிகள் நடத்திய எதிர்ப்புப் பேரணியில் ஏற்பட்ட மோதலில் பத்திரிகையாளர்கள் உட்பட 150 பேர் படுகாயமடைந்தனர். பங்களாதேஷில் ஆளும் கட்சியான தேசியவாதக் கட்சியின் கொள்கைக்கு எதிராக அந்நாட்டு எதிர்கட்சிகள் போராட்டம் நடத்தி வருகின்றன. ஆளும் தேசியவாதக் கட்சியை சேர்ந்த மாணவர் மற்றும் இளைஞர் அணியினர் பேரணியில் கலந்து கொண்டவர்கள் மீது திடீர்த் தாக்குதல் நடத்தினர். அப்போது ஏற்பட்ட மோதலில் 150 பேர் காயமடைந்தனர்.

## உலக அரங்கில்

## அமைச்சர் நியமனத்தை ஈரான் நாடாளுமன்றம் மீண்டும் நிராகரிப்பு

ஈரானின் முக்கியமான எண்ணெய்வளத்துறை அமைச்சகத்துக்கு அமைச்சராக ஈரான் அதிபர் மஹ்மூத் அஹ்மத்நிஜாட் அவர்கள் நியமித்த மூன்றாவது நபரையும் ஈரானிய நாடாளுமன்றம் நிராகரித்துவிட்டது.

நாடாளுமன்றம் கடந்த சில மாதங்களில் இவ்வாறு மூன்று பேரை நிராகரித்துள்ளது என்பது புதிய அதிபருக்கு விடுக்கப்படும் ஒரு முன்னுதாரணமற்ற சவால் என்றும் இது அதிபருக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள பெரிய ஒரு தர்மசங்கடம் என்றும் அங்குள்ள செய்தியாளர்கள் தெரிவிகின்றனர்.

இந்த முறை அமைச்சராக நியமிக்கப்பட்ட மொஹசென் டசலோட்டி அமெரிக்காமற்றும் பிரிட்டனுடன் பலமான தொடர்புகள் வைத்திருந்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

இந்த முடிவு குறித்து தனது விரக்தியை வெளியிட்ட அதிபர் அஹ்மத் நிஜாட் அமைச்சராக நியமிக்கப்படுபவர்கள் எல்லாம் அநாமதேயக் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கவேண்டியதில்லை என்கிறார்.

இந்தப் பதவியை அரசு எப்படி நிரப்பப்போகிறது என்பது தெளிவாகவில்லை என்று குறிப்பிடும் அரசியல் அவதானிகள்,

ஈரானின் அதிவுயர் அரசியல் சட்ட அமைப்பான பாதுகாவலர் சபை இப்போது தலையிடும் சாத்தியம் உள்ளது என்றும் மேலும் கூறுகிறார்கள்.

## பனிப் பாறைகள் வேகமாக உருகுவதால் உலகின் பல பகுதிகள் நீரில் மூழ்கும்!

### விஞ்ஞானிகள் எதிர்வு கூறல்

வாஷிங்ரன்,நவ.25

உலகின் பல பகுதிகள் 100 ஆண்டுகளில் கடல்நீர் மட்டம் 1 மீற்றர் உயர்ந்து மூழ்கும் அபாயம் ஏற்படும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

உலகில் மாறிவரும் தட்பவெப்ப நிலைகள், இயற்கைமாற்றங்கள், விஞ்ஞான வளர்ச்சி ஆகியவற்றுக்கு கிடையே உலகின் வெப்பம் அதிகரிப்புக் காரணமாக வடதுருவத்தில் உள்ள பனிப்பாறைகள் கொஞ்சம் கொஞ்சமாக உருகி வருகின்றன.

வடதுருவத்தில் வெப்பம் அதிகமாகவதால் அங்கு பனிப்பாறைகள் இப்போது வேகமாக உருகி வருகின்றன. இதனால் கடல் மட்டம் அதிகரித்து வருகிறது.

இதுபற்றி ஆய்வு நடத்திய விஞ்ஞானிகள் அபாய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

இதன்படி இன்னும் 100 ஆண்டுகளில் கடல் நீர்மட்டம் 1 மீற்றர் உயர்ந்துவிடும். இந்த மாற்றம் உலகின் பல பகுதிகளில் பாதிப்புகளை ஏற்படுத்தும், புயல், பலத்த மழை போன்றவை அடிக்கடி ஏற்பட்டு பேரழிவுகள் ஏற்படும். கடல் நீர் மட்டம் உயர்ந்து பல பகுதிகளை மூழ்கடித்துவிடும்.

இந்த அபாயத்தை விஞ்ஞான ரீதியில் தடுக்க நடவடிக்கை எடுத்தாலும் கூட அதற்கு 1,000 ஆண்டுகள் பிடிக்கும் என்றும் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

## சீனாவில் பறவைக்காய்ச்சல்

பீஜிங், நவ.25

சீனாவில் பறவைக்காய்ச்சல் நோய் அச்சம் காரணமாக சீனாவில் கோழி இறைச்சி விற்பனையில் பெரும் சரிவு ஏற்பட்டுள்ளது. உலகில் மிகப்பெரிய கோழி வளர்ப்பு நாடு சீனா என்பது குறிப்பிடத்தக்கது.

சீனா உட்பட பல ஆசிய நாடுகளில் கடந்த 2003ஆம் ஆண்டு 'பறவைக் காய்ச்சல்' நோய் ஏற்பட்டு 67 பேர் உயிரிழந்தனர். இதைத் தொடர்ந்து சீனா, வியட்நாம், இந்தோனேசியா உட்பட ஆசியாவின் பல நாடுகளில் கோழிக்கறி விற்பனை முற்றிலும் பாதித்தது.

இந்த நிலையில், கடந்த மாதத்தில் சீனாவில் மீண்டும் 'பறவை காய்ச்சல்' நோய் ஏற்பட்டது. எச்.5 என்.1 என்ற பெயரிலான புதிய வைரஸ் கோழிகளைத் தாக்கி வருகிறது. இந்த வைரஸ் 17 இடங்களில் தாக்கியுள்ளதால் சீனாவில் பெரும் அச்சம் ஏற்பட்டுள்ளது.

எச்.5. என்.1 வைரஸால் உலகில் மிகப் பெரிய கோழிக்கறி உற்பத்தி நாடான சீனாவில் கோழி மற்றும் வாத்து விற்பனை குறைந்து விலையில் 90 சதவீதம் சரிவு ஏற்பட்டுள்ளது என்று சீனப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

பறவைக் காய்ச்சல் அச்சத்தால் கோழிக்கறி சாப்பிடுவதை நிறுத்திய சீனர்கள் அதற்குப் பதிலாக பன்றி இறைச்சியைச் சாப்பிட்டு வருகின்றனர். இதனால், சீனாவில் பன்றி இறைச்சி விற்பனை அதிகரித்துள்ளது. கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சீனாவின் தென் மேற்கு மாகாணத்தில் பன்றிக் கறி மூலம் உருவான நோய் தாக்கி 40 பேர் உயிரிழந்தனர். இதனால் பன்றி இறைச்சி விற்பனை குறைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

வியட்நாம் நாட்டில் பறவைக் காய்ச்சலுக்கு கடந்த 2003ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 40 பேர் பலியாகியுள்ளனர். வியட்நாம் தலைநகர் ஹனோய் நகரில் சோதனை செய்யப்பட்ட கறிக் கோழியை தான் விற்கவேண்டும் என்று அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

## லைபீரியா அதிபர் தேர்தலில் ஜோன்சன் அம்மையார் வெற்றி

தெய்ரான்,நவ.25

ஆபிரிக்கா நாடான லைபீரியாவில் நடந்த அதிபர் தேர்தலில் எல்லன் ஜோன்சன் சர்லீடஃப் அம்மையார் வெற்றி பெற்றுள்ளார் என அந்த நாட்டின் தேர்தல் ஆணையம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

ஹார்வார்ட் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்ற முன்னாள் வங்கி ஊழியரான ஜோன்சன் சர்லீஃப் ஆபிரிக்க நாடு ஒன்றுக்கு தலைவராக ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்படும் முதல் பெண்மணி ஆவார்.

இவரை எதிர்த்துத் தேர்தலில் போட்டியிட்ட முன்னாள் கால்பந்து வீரர் ஜோர்ஜ் வீ தேர்தல் வாக்குப்பதிவு சில இடங்களில் முறைகேடாக நடந்துள்ளது என்று கூறிய குற்றச்சாட்டுகள் விசாரிக்கப்பட்ட பின்னர் தேர்தலின் முடிவுகள் அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளன.

திருமதி ஜோன்சன் சர்லீஃப் கிட்டதட்ட 20 சதவீத வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளார்.

லைபீரியத் தேர்தல் முறைகேடுகளின்றி நடந்ததாகவும் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகள் பெரும்பாலும் சிறப்பாகச் செய்யப்பட்டிருந்தன எனவும் சர்வதேச கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கால்நூற்றாண்டு காலமாக போரையும்,சர்வாதிகார ஆட்சியையும் லைபீரியா சந்தித்த பிறகு இந்தத் தேர்தல் நடத்தப்பட்டது என்று குறிப்பிடப்படுகிறது.

## ஐ.நாவின் வோல்கர் குழுவிடமிருந்து முக்கிய ஆவணங்கள் கிடைத்துள்ளன

### இந்திய விசாரணைக் குழு தகவல்


நியூயோர்க், நவ.25

ஈராக்கில் எண்ணெய்க்குப் பதில் உணவுத்திட்ட ஊழல் தொடர்பான இந்திய விசாரணைக் குழுவினரால் ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணைக் குழுவான வோல்கர் குழுவிடமிருந்து முக்கிய ஆவணங்கள் பெறப்பட்டுள்ளன என இந்திய அரசின் விசாரணைக் குழுவின் சிறப்புத் தூதர் வீரேந்திர தயாள் தெரிவித்துள்ளார்.

இது குறித்து வீரேந்திர தயாள் தெரிவிக்கையில்,

ஈராக்கில் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் ஆட்சியில் கச்சா எண்ணெய்க்குப் பதில் உணவு வழங்கும் ஐ.நாவின் திட்டத்தில் நடந்ததாகக் கூறப்படும் ஊழல் விவகாரத்தில் இந்திய மத்திய அமைச்சர் நட்வார் சிங் மற்றும் இந்தியக் காங்கிரஸ் கட்சிக்கும் தொடர்பு இருப்பதாக வோல்கர் குழு சமீபத்தில் கூறியிருந்தது.

இந்த விவகாரம் தொடர்பாக சில முக்கிய ஆவணங்கள் கிடைத்துள்ளன. நான் புதுடில்லி திரும்பியபின் அவை ஆராயப்படும் என்றார் அவர்.



இந்தியாவின் பீகார் மாநிலத்தின் புதிய முதலமைச்சராக நேற்றுப் பதவியேற்றுக்கொண்ட நிதீஷ்குமாரும் பீகாரின் துணை முதலமைச்சரான ராஜேஷ்குமாரும் ஒருவரை ஒருவர் கட்டித் தழுவி மகிழ்ச்சி தெரிவிப்பதைப் படத்தில் காணலாம்.

## மலேசியாவில் அரச தொழில் கட்டாயம்: அரசு அதிரடியான சட்ட நடவடிக்கை!

கோலாலம்பூர்,நவ.25

வெளிநாடுகளில் உயர் கல்வி பயின்று நாடு திரும்பும் பட்டதாரி இளைஞர்கள். ஆரம்பத்தில் மூன்று ஆண்டுகள் அரசுப் பணி செய்தால் மட்டுமே தனியார் நிறுவனங்களில் தொழில்புரிய முடியும் என்ற புதிய தனிச்சட்டத்தை மலேசிய அரசு விரைவில் அமுல்படுத்தவுள்ளது.

வெளிநாடுகளுக்குச் செல்லும் மலேசிய மாணவர்கள் நாடு திரும்பி வெளிநாட்டு நிறுவனங்களில் வேலை செய்துவருகின்றனர்.

இதனால் அரசுப் பணிகளில் திறமையுள்ள உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை நிலவிவருகிறது.

கடந்த சில ஆண்டுகளாக இதை ஆய்வு செய்த மலேசிய அரசு, இப்போது அதிரடிச் சட்டம் கொண்டு வர முடிவுசெய்துள்ளது. மலேசியாவிலிருந்து வெளிநாடுகள் சென்று கல்வி கற்றுத் திரும்பும் இளைஞர்கள், நேரடியாகத் தனியார் நிறுவனங்களின் வேலையில் சேரமுடியாது. அவர்கள் முதல் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் வரை முக்கிய அரசுத் துறைகளில் பணிபுரிந்தே ஆகவேண்டும். அதன் பின்னர், அவர்கள் விரும்பியபடி, வேறு நிறுவனங்களில் பணிபுரியலாம். வெளிநாடும் செல்லலாம்.

மலேசிய மனிதவள அமைச்சர் கருத்து தெரிவிக்கையில்,

'மலேசியாவில் இருந்து வெளிநாடுகளுக்கு மேல் கல்வி கற்கச் செல்லும் மாணவர்களுக்கு அரசு பல சலுகைகளை அளிக்கிறது. அவர்கள் படித்துத் திரும்பிய பின்னர் அரசுக்கு எந்தச் சேவையையும் செய்வதில்லை. பணம் சம்பாதிப்பதில் குறிக்கோளாக உள்ள அவர்கள், வெளிநாட்டு நிறுவனங்களில் வேலைக்குச் சேர்ந்து விடுகின்றனர்.

அதனால் அரசுப் பணிகள் தேக்கம் அடைவது மட்டுமின்றி, அரசிடம் திறமையான பணியாளர்கள் குறைந்து விடுகின்றனர். இதை அனுமதிக்க முடியாது. அதேசமயம், படித்த திறமையான இளைஞர்களின் வெளிநாட்டு வேலை ஆர்வத்தையும் தடைபோட முடியாது. அதனால்தான் இத்தகைய திட்டம் கொண்டுவரப்படுகிறது.

இந்தச் சட்டத்துக்கான விவரங்களை விரைவில் தொகுத்து, நாடாளுமன்றில் தாக்கல் செய்ய உள்ளார் மனிதவள அமைச்சர். சமீபத்தில் நாடாளுமன்றில் வரவு - செலவுத் திட்டத்தை தாக்கல் செய்த பிரதமர் அப்துல்லா அகமது பதாவி, வெளிநாடுகளில் படிக்கும் மாணவர்களின் கல்விச் செலவில் வரிச்சலுகையை அறிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மலேசியாவில், கல்விகற்று வேலை கிடைக்காமல் உள்ள பட்டதாரிகள் மொத்தம் 60 ஆயிரம் பேர் உள்ளனர் என அரசு கணக்கெடுத்துள்ளது. அவர்களுக்கு வேலைத் திறமையையும், ஆங்கிலம் கையாளும் திறனையும் பயிற்றுவிக்க தனிப் பயிற்சித்திட்டத்தையும் அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இதில் ஏழாயிரத்து 800 பட்டதாரி மாணவர்கள் சேர்ந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# மஹிந்த விஜேசேகர எம்.பிக்கும் ஆறு பேருக்கும் பிணை அனுமதி

காலி, நவ.25

ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் இடம் பெற்ற வன்செயல் சம்பவம் தொடர்பாகக் குற்றம் சுமத்தப்பட்ட ஐ.தே.கட்சியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த விஜேசேகர உட்பட ஏழு பேருக்கு மாத்தறை நீதிமன்றம் பிணை வழங்கியது.

''மக்கள் பிரதிநிதிகள் ஒழுக்க சீலர்களாக மிளிர்வதுடன், பொறுப்பு மிக்கவர்களாகவும் நடந்துகொள்ளவேண்டும். அத்துடன் ஏனையோர்களுக்கு முன்மாதிரியாகவும் திகழவேண்டும். இந்த வழக்கின் சாட்சிகள் யாரும் அச்சுறுத்தப்பட்டால் சந்தேகநபர்கள் அனைவரதும் பிணையை ரத்துச்செய்யப்பட்டு அவர்கள் வழக்கு முடியும்வரை விளக்கமறியலில் வைக்கப்படுபவார்கள் என்பதை சந்தேக நபர்கள் மனதில் கொள்ள வேண்டும்.'' - இப்படி மாத்தறை மேலதிக நீதிவான் செல்வி பிரபாகுமாரி தால்லா பண்டார பிணை வழங்கும்போது எச்சரித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் தினமான நவம்பர் 17ஆம் திகதி வெலிகம கல்பொக்கை அரபா வித்தியாலயத்துக்கருகே வைத்து, ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம சிறிமான கேவை மிருகத் தனமாகத் தாக்கி அவரது 16 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான தங்க மாலையைக் கொள்ளையிட்டதோடு, இரு வாகனங்களையும் அடித்துச் சேதப்படுத்தினர் என முன்னாள் ஐ.தே.கட்சி எம்.பியான எச்.ஆர்.பியசிறி, தயானந்த விக்ரமசிங்க, தென்மாகாணசபை உறுப்பினர்களான ஜினதாச குணவர்தன, பிரனித்பதம திலக்க, வெலிகம பிரதேசசபை உபதலைவர் தயா புஷ்பா, பட்டகே சிசிற தமிந்த ஆகிய 7 பேர் மீதும் குற்றம் சுமத்தி வெலிகம பொலீஸாரால் இந்த வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இவ்வழக்கு நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது ஏழு சந்தேகநபர்களையும் தலா 20 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் ஒரு லட்சம் ரூபா வீதம் சரீரப்பிணையிலும் செல்ல அனுமதித்த நீதிவான், ஒவ்வொரு மாதமும் இறுதி ஞாயிற்றுக்கிழமை வெலிகமை பொலீஸில் கையெழுத்து வைக்க வேண்டும் என்றும் சந்தேக நபர்களுக்கு உத்தரவிட்டார்.

(க)

## முன்பள்ளிக் கலைவிழா

குழந்தைகள் தினத்தையொட்டி பண்ணாகம் அம்பாள் கலைமன்ற மண்டபத்தில் இன்று முற்பகல் 9 மணி முதல் வடக்கு-கிழக்கு மாகாண முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையமும் வலி.மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கமும் இணைந்து நடத்தும் முன்பள்ளிச் சிறார்களின் கலைவிழா வலி.மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவி திருமதி ப.கிருஷ்ணவேணி தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் கலந்து கொள்வார்.கௌரவ விருந்தினர் சி.ஏ.மோகன்றாஸ் பிரதேச செயலர் சங்கானை, சிறப்பு விருந்தினர்கள் சு.ஜெயராஜ், எஸ்.சிவகணேஸ், இ.இராசதுரை, சி.சிவநேயன், த.கிருபாகரன், ச.ஐங்கரன், தி.உதயசூரியன், திருமதி ஜெ.சோமன்ராஜ், சி.திலகவதியார், சு.ஜெயரஞ்சினி, யோ.நளினி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சியும் இடம்பெறும்.

(ஒ-28)





தாங்கிய தமிழர் நெஞ்சை
துடித்திடச் செய்தோன் – ஈழம்
வாங்குவோம் எழுக என்றே
வாலிப மனதை வென்றோன்
வேங்கைகள் சாவுக்கஞ்சா
வீரர்கள் என்றே சொல்ல

தாங்கிய தலைவன் எங்கள்
தளபதி அன்பின் அண்ணன்!
ஆயிரம் களங்கள் கண்ட
அண்ணனை – தமிழீழத்தின்

பாயிரம் ஆகப் போகும்
பரணியின் தலைவன் தன்னை
ஏவிய படைகள் வந்து
என்னடா செய்யும் – எங்கள்
காவியம் களத்தில் வெல்லும்
காலங்கள் அவன் பேர் சொல்லும்!

- தென்மராட்சி மக்கள் -

க.பொ.த உயர்தரம் சித்தியா? வேலை இல்லை என்ற கவலை வேண்டாம்......

பயிற்சியும் பணிநியமனமும்

JOB TRAINING PROGRAM

கல்வித்தகுதி : க.பொ.த உயர்தரம் கட்டணம் : ரூபா 12000/-

அனுமதிக்கு இன்று (25.11.2005) அல்லது நாளை (26.11.2005) சுயவிபரக்கோவையுடன் நேரில் வரவும்

கிழமை பிரிவு ஆரம்பம் : 28.11.2005 சனி ஞாயிறு பிரிவு ஆரம்பம் : 03.12.2005

பயிற்சியின்போதும் ஊதியம் வழங்கப்படும். பயிற்சி முடிவில் கீழ்வரும் திணைக்களப்பணியிடங்களில் பணி நியமனம்

❑ ADMINISTRATION ❑ TEACHING ❑ WEB ❑ ENGLISH ❑ GENERAL KNOWLEDGE ❑ COMPUTING ❑ MINNAL
❑ QUIZ PORTAL ❑ LEARNING ACTIVITY DEVELOPMENT ❑ MULTIMEDIA ❑ JAFFNA DIRECTORY ❑ MARKETING
❑ ADVERTISING ❑ GRAPHICS ❑ PLANNING ❑ MANAGEMENT ❑ GENERAL WORK ❑ OTHERS

மேலும் சில வெற்றிடங்களே உள்ளது. முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையிலேயே அனுமதி வழங்கப்படும்

SAAMSTECH

841, Hospital Road, Jaffna. Ph : 4591571

233/4, Kasthuriyar Road, Jaffna. Ph : 2229505

அமரர் பிரம்ம ஸ்ரீ
சர்வேஸ்வரக் குருக்கள்
வரதராஜேஸ்வரக் குருக்கள் அவர்களது

## இரண்டாவது ஆண்டு நினைவு நூல் வெளியீட்டு விழா

நூல்
**சௌளமும்,உபநயனமும்**
(சமஸ்கிருதம்,தமிழ்)
இடம்:
**சுன்னாகம் மயிலணிக்கந்தசாமி கோயில்**
காலம்:
கார்த்திகை மாதம் 11 ஆம் நாள்(26.11.2005) சனிக்கிழமை பிற்பகல் 2 மணி (புதிய நேரம்)
தலைவர்
**சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள்** அவர்கள்
(பிரதம குரு கதிரமலைச்சிவன் ஆலயம்)
**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**
(43175) (54-34-13)

## 45ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

சேர்ப்பு 28 * 09 * 1947



விடுப்பு 12 * 10 * 2005

### அமரர் கணபதி இராசதுரை

(B.Ed., B.A. (Pol.Sc.), M.A.(Ed.),SLPS I, J.P.
(முன்னாள் அதிபர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)

*கடந்த 12.10.2005 அன்று அகாலமரணமடைந்த எமது குடும்பத் தலைவரின் மரணச்சடங்கு நிகழ்வுகளில் பங்குபற்றி அனைத்து உதவிகளும் வழங்கி எமது துயரில் பங்குகொண்ட அனைத்து உள்ளங்களிற்கும் நன்றி கூறுவதோடு, இன்று (25.11.2005) வெள்ளிக்கிழமை மத்திய கல்லூரி அதிபரின் விடுதியில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*அதிபர் விடுதி,*
*மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.* (43192) (54-34-13)
தகவல்:
**குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி



*கொனிக்கா கலர் லாப்பில் ஆரம்பம் முதல் சமகால வளர்ச்சி நிலைவரை உறுதுணையாக நின்று எமது வளர்ச்சிக்கு பங்காற்றிய காசாளர்*

அமரர்
### சி. கந்தசாமி

*அவர்களின் அகாலமரணச் செய்தி அறிந்து துயருறுகின்றோம். அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக் கின்றோம்.*

உரிமையாளரும், ஊழியர்களும்,
கொனிக்கா கலர் லாப்.
(சி-46380) (54-34-13)

## 23.11.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்




செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 200771933 இலிருந்து 200784682 வரை

சீட்டிழுப்பு இல. 1661

வெற்றி எண்கள்
**08 22 26 41** சுப்பர் எண் **13**

**சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.1,52,70,000/- வெல்லப்படவில்லை**

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 1,52,70,000/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | - | 10,00,000/- | - |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 28 | 5,000/- | 1,40,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 316 | 1,000/- | 3,16,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,010 | 500/- | 5,05,000/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 15,458 | 40/- | 6,18,320/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 14,686 | 20/- | 2,93,720/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,19,216 | 10/- | 21,92,160/- |
| | | மொத்தம் | 40,65,200/- |
| தங்க நகைகள், தையல் இயந்திரம்,பைசிக்கிள் | 5 | 1,00,000/- | 5,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 45,65,200/- |


**இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 1,58,55,650/-**

தொடர் இல. 300725221 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுக்கள் 2005 நொவம்பர் 26 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் ரூபா 1,00,000/- பெறுமதியான தங்க நகைகள், தையல் இயந்திரம் மற்றும் பைசிக்கிள் அடங்கிய பரிசு பொதியை வென்றெடுத்த 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கண்டி | 20078165-0-84 |
| அனுராதபுரம் | 200773778-3-50 |
| மாத்தளை | 200772946-7-39 |
| திருகோணமலை | 200782989-3-13 |
| நுவரெலியா | 200774704-3-98 |

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.



நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நேற்று இடம் பெற்ற ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குரு பூசை தின நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் துர்க்கா துரந்தரி சிவத் தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையுரை ஆற்றுவதையும் யாழ். பல்கலைக்கழக ஊடக வள நிலைய பணிப்பாளர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் சிறப்புரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: பகீரதன்)

## மணல் பெறுவதில் சிரமம்: வீடமைப்புப் பணிகள் தாமதம்

யாழ்ப்பாணம்,நவ.25

ஊர்காவற்றுறை பிரதேசத்தில் உலக வங்கியின் உதவியுடன் வீடுகளை நிர்மாணிக்கும் பயனாளிகள் கட்டடப் பணிகளுக்குத் தேவையான மணலைப் பெறுவதில் சிரமம் எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் இரண்டு மாதகாலமாக கட்டடப் பணிகளுக்குத் தேவையான மணலைத் தம்மால் பெறமுடியாமல் போய்விட்டது என்றும் - அவர்கள் தெரிவிக்கின்றனர்.

பண்ணைப்பாலத்தை புனரமைப்பதற்கான வேலைகள் நடைபெற்ற சுமார் மூன்று வாரகாலம் கட்டடப் பணிகளுக்கான மணல் எடுத்துவரப்படவில்லை.

பாலம்புரைமைக்கப்பட்ட பின்னர் மணல் எடுத்துவரப்படும் என நம்பியிருந்தோம் ஆனால், பருவமழை காரணமாக வடமராட்சி கிழக்கில் மணல் அகழும் பணி அடிக்கடி தடைப்படுவதாக மணல் எடுத்துவருவோர் எம்மிடம் தெரிவிக்கின்றனர் - அத்துடன் பருவமழையும் வீடமைப்புப் பணிகளை முன்னெடுக்கவிடாமல் தடுத்து நிற்கிறது.

ஆனால், வீடமைப்புத் திட்டம் தொடர்பான அதிகாரிகளோ, விரைவில் வீடமைப்புப் பணிகளை நிறைவு செய்யுமாறு அறிவுறுத்தி வருகின்றனர். நாம் செய்வதறியாது உள்ளோம் - என்று வீடமைப்புப் பயனாளிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம்,வண்ணார்பண்ணை, காங்கேசன்துறை வீதியில், சிவதொண்டர் நிலையத்திற்கு அருகில் 5 பரப்புக் காணி இரு வழிப்பாதையுடன் விற்பனைக்கு உண்டு.
**மேலும் விவரங்களுக்கு தொடர்பு:**
0773242872
(சி-46368) (54-12-17)

**ராஜா யாழ்ப்பாணம்**



நாலாவது வாரம்
*விக்ரம், அஸின், வடிவேல், மணிவண்ணன் நடித்த*
காட்சிநேரம்: பு.நே.
10.30, 2.30 , 6.30 9.30

**நாகம்ஸ் சுன்னாகம்**

பார்த்திபன், வடிவேல், லட்சுமிராய் நடித்த
**குண்டக்க மண்டக்க**
காட்சிநேரம்: பு.நே. 11.00, 3.00, 7.00,
**அடுத்த வெளியீடு - அர்ஜுன் நடித்த**
**ஆணை**
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

**மனோகரா யாழ்ப்பாணம்**

இளைய தளபதி விஜய் வெடிக்கும்
காட்சிநேரம்: பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30
யாழ். மாவட்டத்தில்
முதல் முறையாக




## கண்ணீர் அஞ்சலி

யாழ்.றோட்டறிக் கழகத்தின் அங்கத்தவர்
Rtn. V.P. சசிவர்ணன் அவர்களின் தந்தை

**பிரம்மஸ்ரீ**
### விஸ்வநாத ஐயர் பரிபூரணானந்த சர்மா

(இளைப்பாறிய உப அதிபர்)

அவர்களின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்ற அதேவேளை அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-46379) (54-34-13)
**யாழ்.றோட்டறிக் கழகம்.**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இலட்சுமணர் பசுபதி (சின்னாச்சி)



உரும்பிராய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இலட்சுமணர் பசுபதி அவர்கள் நேற்று (24.11.2005) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இலட்சுமணரின் அன்பு மனைவியும் தம்பிராசா, செல்வராசா, செல்வராணி ஆகியோரின் தாயாரும் நவரத்தினம், பராசக்தி, சரோஜா ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2005) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பன் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உரும்பிராய் மேற்கு,*
*உரும்பிராய்.* (43190) (54-34-13)
தகவல்:
**பிள்ளைகள்.**

### கந்தப்பு இராமச்சந்திரன்



புங்குடுதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது கொக்குவில் மேற்கு, சொர்ண வடலிப்பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பு இராமச்சந்திரன் (இளையதம்பி) அவர்கள் நேற்று (24.11.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பு - செல்லம் தம்பதியரின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான ஏரம்பு-இராசம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற கண்மணியின் அன்புக் கணவரும் அருந்தவராசனின் (கனடா) அன்புத் தந்தையும் சத்தியபாமாவின் மாமனாரும் செந்தீசன், லுதர்சன், தர்சிகன், ஞானுப்பிரியா, அனுசியன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், நல்லதம்பி ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு, யோகம்மா, பார்வதி, மகாலட்சுமி மற்றும் நாகேசு குருமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2005) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லடக்கத்துக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.* (43193) (54-34-13)
தகவல்:
குணரத்தினம் - மதி

### திருமதி சாரதா ஆறுமுகம் (துவம்)



வட்டுக்கோட்டை தெற்கு,அரசடி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாரதா ஆறுமுகம் (துவம்-B.MC. மன்னார்) நேற்று (24.11.2005) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினம் பரமேஸ்வரியின் (இஞ்சியக்கா) மகளும் கணேசன் (இ.போ.ச. ,காரைநகர்), சிவனேசன் (பிரான்ஸ்), சரோஜா, குணதாசன் (குவைத்) ஆகியோரின் அருமைச் சகோதரியும் யோகீஸ், டினேஸ், கிரிதாஸ் ஆகியோரின் பாசமிகு தாயும் சந்தானலக்சுமி, லோகநாதன், கொஸிக்கா (பிரான்ஸ்), ராஜசுலோசனா ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2005) வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று,பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்துத்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அரசடி வீதி,*
*வட்டுத் தெற்கு,*
*வட்டுக்கோட்டை.* (சி-416377) (54-34-13)
தகவல்:
சு. ஆறுமுகம்
(தலம் - கணவர்)

# மூத்த தளபதிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தில் வீரகாவியமான மாவீரர்களுக்கு தமது மரியாதை அஞ்சலியைச் செலுத்தினர்.

ஆனையிறவுப் படைத்தளப் பகுதி இதற்கென சிறப்பான முறையில் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அங்கு பிரமாண்டமாக அமைக்கப்பட்டிருந்த நினைவாலயத்தில் ஆனையிறவு, பூநகரி சமர்களில் வீரகாவியமான மாவீரர்கள், எல்லைப்படை, நிதித்துறை மாவீரர்கள், கரும்புலி மாவீரர்கள் என இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோரின் திருவுருவப்படங்கள் வைக்கப்படிருந்தன. ஆனையிறவு மற்றும் அதனை அண்டிய ஏ -9 நெடுஞ்சாலை மின்விளக்குகளினாலும், சிவப்பு, மஞ்சள் கொடிகளினாலும் அழகுற அலங்கரிக்கப்பட்டிருந்தது.

முன்னெப்போதும் இல்லாத வகையில் பிரமாண்டமாக அமைக்கப்பட்ட இந்த நினைவாலயம் நேற்று மாலை திறந்து வைக்கப்பட்டது. புலிகளின் முக்கியஸ்தர்கள் பலர் உட்பட பல நூற்றுக்கணக்கான போராளிகள் திரண்டிருக்க மாலை 6 மணியளவில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

நிகழ்வின் பொதுச் சுடரினை சோதியா சிறுத்தைப் படையணியின் சிறப்புத் தளபதி கேணல் துர்க்கா ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியினை வடபோர்முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் ஏற்றினார். முதலாவது மாவீரர் லெப். சங்கரின் திருவுருவப் படத்துக்கு தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் ஈகச்சுடர் ஏற்றினார். முதலாது பெண்மாவீரர் 2ஆம் லெப். மாலதியின் திருவுருவப்படத்துக்கு தமிழீழ அரசியல்துறை மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் தமிழினியும், முதலாவது கரும்புலி மாவீரர் கப்டன் மில்லரின் திருவுருவப்படத்திற்கு அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ராமும் முதல் பெண்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணி யின் திருவுருவப்படத்துக்கு தளபதி கேணல் ரமேஸும், முதலாவது எல்லைப்படை மாவீரர் அப்பனின் திருவுருவப்படத்துக்கு நிதித்துறை வணிக ஒன்றியத் தலைவர் வெற்றியரசனும் ஈகச்சுடர்களை ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மான், தளபதிகளான கேணல் தீபன், கேணல் கடாபி, கேணல் சூசை புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே. பாலகுமாரன் உட்பட பிரமுகர்கள் பலர் ஈகச்சுடர்களை ஏற்றினர்.

அரங்க நிகழ்வுகள் நிதித்துறையைச் சேர்ந்த போராளி பிறைசூடிதலைமையில் ஆரம்பமாகின. தளிர்சிறுவர் இல்ல சிறார்களின் மாவீரர் வணக்க நடனத்தை தொடர்ந்து தமிழீழக் கடற்படைத் தளபதி கேணல் சூசை, ராஜன் கல்விப்பிரிவுப் பொறுப்பாளர் கீதன், புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மான் ஆகியோர் சிறப்புரையாற்றினர். தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. விடுதலைப்புலிகளின் மூத்த தளபதிகள் மகளிர்அணியின் சிறப்புத் தளபதிகள் உட்பட பிரமுகர்கள் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தார்கள். இதனை யொட்டி நேற்றுக்காலை முதல் பளை தொடக்கம் பரந்தன் சந்தி வரையான ஏ-9 நெடுஞ்சாலையில் பாதுகாப்பு பலப்படுத் தப்பட்டிருந் தது. தமிழீழக் காவல் துறையினரும் போராளிகளும் இணைந்து பலத்த பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததைக் காணமுடிந்தது.

அங்கு அமைக்கப்பட்டுள்ள மாதிரி வடிவிலான நினைவாலயத்தில் வைக்கப்பட்டுள்ள மாவீரர்களின் திருவுருவப் படங்களை இன்று தொடக்கம் நாளை மறுதினம் 27 ஆம் திகதி வரை பொதுமக்கள் பார்வையிடமுடியும் என்று தெரிவிக்கப் பட்டது. (த-7-352)

# சிங்களத் தலைமையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எத்தகைய பங்களிப்பை ஆற்றின என்பதை நாம் அறிவோம். தனித்துவிட்ட ஒரு இனமாக - இன்னொரு நாட்டின் உதவிகள் ஏதுமற்ற ஓர் இனமாக தமிழினம் தனது விடுதலைக்கு தானாகவே போராடவேண்டிய ஒரு வரலாற்று நிலையில் நிற்கிறது. அந்த விடுதலைப் போராட்டம் விட்டுக்கொடுக்கப் படாமல் இன்றும் நடந்துகொண்டிருக்கின்ற - தலைநிமிர்ந்து நிற்கின்ற இந்த எழுச்சி நிலைக்கு மாவீரர்களே காரணம்.

நாம் பிற உதவிகள் அற்ற நிலையை மாவீரர்களின் உயிர்களை விலையாகக் கொடுத்தே ஈடுகட்டியுள்ளோம். எமது விடுதலை வரலாற்றின் நிரந்தர அடையாளங்களாக - தமிழீழ நாட்டின் நிரந்தரமான அத்தி வாரங்களாக அவர்கள் அமையும் போது தான் அவர்களின் அர்ப்பணம் பெறுமதியானதாக இருக்கும்.

இதுவரைகால விடுதலைக்கு நாம் கொடுத்திருக்கின்ற விலை உண்மையானதாக ஆகுவதற்கு தமிழினம் விடுதலை பெறுவது அவசியம். மிகவும் நெருக்கடியான சூழலில் இந்திய இராணுவத்துடன் போர் புரிந்துகொண்டிருந்த வேளையில் - தனது பாதுகாப்பே அச்சுறுத்தலுக்குள்ளாகியிருந்த வேளையில் தலைவர் அவர் கள் மாவீரர் நாள் பற்றிச் சிந்தித்தார். விடுதலைக்காக விலையாகக் கொடுக்கப்பட்ட உயிர்கள் தமிழீழ மக்களின் வரலாற்றிலே பதியப்பட வேண்டும் என்று தலை வர் விரும்பினார்.

எம்மை பலவீனப்படுத்துவதற்கு சிறிலங்கா அரசாங்கமோ அதற்கு துணைக்கு துணைபோகும் சக்திகளோ நினைத்தால் அவர்களது அந்த முயற்சிக்கு நாம் பலியாகிவிடாமல் தமிழ் இனத்தை பலமாக வைத்திருப்பதன் மூலமே எமது விடுதலையை நாம் உறுதிப்படுத்த முடியும்.

தமிழினம் தேசிய விழிப்புணர்வு பெற்றிருக்கும் ஒரு பெருமிதமான காலத்தில் நாங்கள் நிற்கின்றோம். சிறிலங்கா தேசத்தின் தலைமையை தெரிவுசெய்கின்ற சந்தர்ப்பத்தை தமிழர்கள் புறங்கையால் புறந்தள்ளி பெருமிதத்துடன் நிற்கின்றனர்.

தமிழினத்தின் தேசியத்தின் தலைமையை நாங்கள் தெரிவுசெய்துவிட்டோம். உங்களின் தேசியத்தின் தலைமையை நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள் என்ற ஒரு தெளிவான செய்தியை சொல்வதில் தமிழீழ மக்கள் அனைவரும் திரண்டு சிங்கள தேசத்துக்கு ஒரு பாடத்தை புகட்டியிருக்கின்றார்கள். இதுவும் தமிழினத்தின் பலத்தின் வெளிப்பாடே.

இந்தப் பலத்தை தொடர்ந்தும் தக்கவைத்து தமிழினத்தின் பலம் இராணுவப் பலமாக, பொருளாதாரப் பலமாக, அரசியல் பலமாக வளர்ந்து நிற்கும்போது மாவீரர்களின் கனவு நனவாகும். தமிழீழ விடுதலை விரைவு பெறும். எனவே எமது மக்கள்தலைவரின் பின்னால் அணிதிரண்டு தேசியத்தை பலப்படுத்த வேண்டும் என்றார். (த-7-352)


வெளிக்களப் போதனாசிரியர் போட்டிப் பரீட்சை வகுப்புகள்.
சனி,ஞாயி. 9-1 மணி
திங்க.,வியா.4-6 மணி
ஆரம்பம்: 26.11.2005 - 9.A.M.
நியூட்டன் D.C.S.
ஆரியகுளம் சந்தி அருகில் யாழ்நகர்.



காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளுங்கள்
06 ஆம் பக்கம் பார்க்க



COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல. 15, சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-2228250, 777 222422

அனைத்துக் கணனிக் கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

80% Off

03-12-2005 க்கு முன் பதிவு செய்துகொள்ளவும்.

வகுப்புக்கள் ஆரம்பம்:-
Batch III :- 25/12/2005 - 09.30-11.30
Batch IV :- 26/12/2005 - 11.30-12.30
Batch V :- 26/12/2005 - 02.00-03.00


# பேச்சுக்கு வர புலிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசின் சார்பில் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இத்தகவலை நேற்று வெளியிட்டார்.

அமைதி முயற்சிகளைத் துரிதப்படுத்துவதற்காக அரச சமாதான செயலகத்தின் பணிப்பாளர் நாயகமாக ஜோன் குணரட்ன நியமிக்கப்பட்டுள்ளார். சமாதான செயலகத்தின் முன்னாள் பணிப்பாளர்நாயகம் ஜயந்த தனபால தொடர்ந்தும் சமாதான செயலகத்தின் பிரதம ஆலோசகராகப் பணியாற்றுவார் எனவும் அமைச்சரவைப் பேச்சாளர் தகவல் வெளியிட்டார். நேற்றுக் காலை கொழும்பில் அரசாங்கத்தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இந்த அறிவிப்புக்களை அவர் விடுத்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது தலைமையில் நடைபெற்ற முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகத் தமது அமைச்சரவை சகாக்களுக்குத் தெளிவுபடுத்தியுள்ளார்.

சமாதான முன்னெடுப்புகளுக்கே முன்னுரிமை வழங்கப்படவேண்டும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி அதற்கான காரணிகளையும் விளக்கியுள்ளார்.

இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் கூடுதலான நேரம் சமாதானப் பேச்சுகளை மீள ஆரம்பிப்பது தொடர்பாகப் பரிசீலனை செய்யவே ஒதுக்கப்பட்டது. ஜனாதிபதியின் கூற்றுகள் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டன. பேச்சுகளை ஆரம்பிக்கும் பொறுப்பும் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஜனாதிபதியின் சமாதானத்திட்டங்களை அனைவரும் வரவேற்றுள்ளனர். சமாதான செயலகப் பணிப்பாளர் நாயகமாகவிருந்து அப்பதவியை இராஜினாமாச் செய்த ஜயந்த தனபால செயலகத்தின் பிரதான ஆலோசகராகப் பணியாற்றவும் ஜனாதிபதியின் திட்டங்களுக்கு உதவவும் முன்வந்துள்ளார்.

இந்நிலையிலேயே ஜனாதிபதி தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்.

அதேவேளை, நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல்கட்சிகளுக்கும் அழைப்பு விடப்படும். புலிகளுடன் பேச்சுகளை ஆரம்பிக்கும் முன் தென்பகுதி அரசியல் கட்சிகளின் ஆலோசனைகள் பெறப்படும். இது தொடர்பூான கடிதங்கள் இன்று அல்லது நாளை சகல அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கும் அனுப்பிவைக்கப்படும். - என்றும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கூறினார்.

“ஜனாதிபதியின் ‘மஹிந்தவின்சிந்தனை’யில் ஒற்றை ஆட்சி முறையில்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியானால் எந்த அடிப்படையில் பேச்சுகளை ஆரம்பிக்கப் போகின்றீர்கள்?'' - என செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

''ஏன் அவசரப்படுகின்றீர்கள்?. முதலில் பேச்சுகளை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வோம். கட்சிகளின் ஆலோசனைகளைப் பெறுவோம். பெரும்பான்மையினரின் ஆலோசனைப்படி செயல்படுவோம்.''- என்றார் அமைச்சர்.

''சமஷ்டி முறையிலா? அல்லது ஒற்றையாட்சி அடிப்படையிலா பேச்சுகள் ஆரம்பிக்கப்படும் எனத்திட்டவட்டமாக கூறமுடியுமா?'' - என்று மீண்டும் கேட்கப்பட்டது.

''நாங்கள் வார்த்தைகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு செயல்படவிரும்பவில்லை. இணக்கத்தின் அடிப்படையிலேயே செயல்பட விரும்புகின்றோம்.''- என அமைச்சர் பதில் அளித்தார்.

''இதுவரை காலம் சமாதானப் பேச்சுகளில் முக்கிய பங்கெடுத்த நோர்வே மீண்டும் அழைக்கப்படுமா?''- என அமைச்சரிடம் கேட்டபோது - ''எல்லா விடயங்களையும் ஒரே இரவில் தீர்மானித்து விடமுடியாது. பொறுத்திருந்து பாருங்கள்.'' - என்று கூறி அமைச்சர் சமாளித்துவிட்டார். (க)

# பருத்தித்துறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர் படுகாயமடைந்தார் என்றும் - கூறப்பட்டது. படுகாயமடைந்த இராணுவத்தினரும், சம்பந்தப்பட்ட இளைஞரும் மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவத்தையடுத்து, வீதி மறிப்புப் போட்டு அவ்வீதி ஊடான போக்குவரத்தைப் படையினர் தடைசெய்தனர் எனவும் - இதனால் நேற்றிரவு அங்கு பதற்றநிலை நிலவியதாகவும் அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (எ-13-78)


சலுகை முடிவு
28.11.2006 முதல் SAAMSTECH இன் ஆங்கில நேரடிவகுப்புக்கான கட்டணம் ரூ.6000/- ஆக மாற்றப்படுகிறது

சலுகை
27.11.2005 வரை ஆங்கில நேரடிவகுப்புக்கு சலுகைக்கட்டணம் ரூபா 3000/- மட்டும்.
இதில் முதல் 100 பதிவுகளுக்கு ரூபா 3600/- பெறுமதியான புத்தகங்கள் மற்றும் CD முற்றிலும் இலவசம்
SAAMSTECH
841, Hospital Road, Jaffna. 4591571
233/4, Kasthuriar Rd, Jaffna. 2229505


# நாடாளுமன்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடரை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தபின் புதிய அரசின் கொள்கை விளக்க உரையை அவர் நிகழ்த்துவார்.

அதன்பின் நாடாளுமன்ற அமர்வுகள் ஒத்திவைக்கப்பட்டு பிற்பகல் 12. 30 மணிக்கு மீண்டும் சபை கூடும். அவசரகாலச்சட்டத்தை மேலும் ஒருமாத காலத்திற்கு நீடிப்பதற்கான விவாதம் அப்போது நடைபெறும். (க)

# பேச்சுக்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''மஹிந்தவின் சிந்தனை'' என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டே அமைதித் தீர்வு முன்னெடுக்கப்படவேண்டும். தேசியப் பிரச்சினைக்கான தீர்வு 'மஹிந்தவின் சிந்தனைகள்' என்ற கொள்கையில் இருக்கின்றது. இதனை மீறி பொதுக்கட்டமைப்பையோ, இடைக்கால நிர்வாகத்தையோ அடிப்படையாகக் கொண்ட எந்தவொரு தீர்வுத் திட்டத்தையும் நாம் ஆதரிக்கமாட்டோம்.

அதேபோல் வடக்கு - கிழக்கு இணைப்பை நீக்கவேண்டும். அமைதிக்கான அனுசரணைப் பொறுப்பிலிருந்து நோர்வே மாற்றப்படவேண்டும். போர்நிறுத்த ஒப்பந்தம் திருத்தப்படவேண்டும். பொதுக்கட்டமைப்பை இல்லாமலாக்கவேண்டும். - போன்ற யோசனைகளை நாம் முன்வைத்தே கடந்த செப்டெம்பர் எட்டாம் திகதி ஜனாதிபதி மஹிந்தவுடன் ஒப்பந்தமொன்றை செய்துகொண்டோம். அதற்கே ஆதரவை வழங்குவோம். ஜே.வி.பியின் பங்களிப்பே மஹிந்தவின் வெற்றிக்கான காரணமாகும்.

- இவ்வாறு ரில்வின் சில்வா மேலும் கூறினார். (க)


O/L மாணவர்கட்கு பரீட்சை எதிர்பார்ப்பிற்கான மாபெரும் கருத்தரங்கு
பிரிவு: 1 ஆரம்பம்: 01.12.2005
8 மணி - 5 மணிவரை
பிரிவு: 2 இற்கான அனுமதி வழங்கப்படுகின்றது.
* கணிதம்,விஞ்ஞானம் உட்பட சகல பாடங்களும்
* பிரிவு 1 அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளது.
* பிரிவு 2 இற்கு 300 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி.
* கருத்தரங்கு வினாத்தாள்கள் பெறவிரும்பும் பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் எண்ணிக்கையை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
(43177)(30-34-12)
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.





இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்
250,000/= வீடமைப்பு மீள்நிர்மாண நன்கொடை உங்களுக்கும் கிடைக்குமா?
விவரம் அறிய நாளைய பத்திரிகையை வாசியுங்கள்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.11.2005 இ அச்சிட்டு வெளியிடப்பெற்றது.